வைக்குடியைம்பார்க்குடி யாருயிருப்பார்களுன்
னை கதுதிப்பார்சகல பேரும்
சத்தியமாகக்குண் டைகளைக்கூட்டி
சார்ந்ததற்குவா யாரநீரோட்டி
சத்தியுளமட் டுக்குமேரோட்டி
தக்கவன்றன்றிர மதுமிகக்காட்டி
மற்றுமற்றனைத் தனைத்துமுடிவற
மெகத்மெத்தசித்த மொத்துசெயகுவாய்-திரு

பட்டாங்குனக்கேதடா பாவியென்சொந்தமான
பழனக்களுமீடேறத் தேவிபூசைபுரிந்து
பொட்டெனப்பதம்பணிந்து சேவியிலதமறந்தால்
போகதுகேனேயுன்னிட ஆவி
சட்டமாகவுந் சமர்த்தைகாட்டாதே
சரணமென்றுகன் ணீரைரோட்டாதே
தட்டுவனைகை மிஞ்சிநீட்டாதே
சலசலப்புக்கஞ்சிநரி யோடமாட்டாதே
விட்டுவிட்டுவிட்டு விட்டுவிடுவிடு
கெட்டுகெட்டுகெட்டு கெட்டுப்போகாதே-திருட்

பாயுஞ்சலமுழுதும் கட்டிபதனமாகப்
பலஙுபயெருவடுத்துக் கொட்டிசேறுபோலாட்டி

தோயும்பட-முதலோ
　சொன்னலைப்புவேனோ
காயமுள்ள
　கர்த்தன்றனைக்
வய்ந்துவிட்டுப்போ
　யொக்கதிருவா
ராயன்ராயன்ராயன்
　தியன தியன தியன

ரட்டிவராமஞ்செய்ய
மட்டி
போதேகிகாணடா
காணப்போவாணடா
கப்போராமடா
கிளாக்கனுபபேனடா
ராயன்சாட்சியாய்
தியன்உனைவிடேன்-திரு

இதுவும்-வேதியர்-சொல்லுகிறார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வானிருந்தவிடந்தேடிக் காலுமல்பாதவத்தோர்மதிமயங்கத்
தேனிருந்தசெந்தாளைச் சிந்திப்பார்புகழியுறத்தெளிந்தாரில்லை
ஊனிருந்தும்புலையாநீசிதம்பரத்தேசென்றாலுமுளதோமுத்தி
தானிருந்தவிடம்விட்டுப்போகாமல் சஞ்சலத்தைதள்ளுவாயே

வசனம

அடாவாடாமூடா கேளடா என்னைப்போலொத்தபெரியவர்களாலே கூடகதேடிஅறியப்படாத ஜெகதீசனுடைய திவ்வியநாமத்தைநத்தையு ரிஞ்சம்பறையா நீகேட்டிக்குலைக்கலாமா இப்படித்ததிக்குதிக்கலாமா வித்தையொன்றுமறியாதவனிக்கேபத்திபெண்ணலாமா நத்திமுத்திதேடலாமா லக்ஷமான பெரியோர்களிடத்தே சத்தம்போடலாமா இங்கே நித்தம் காடலாமா ஷபக்கமான இந்தசென்மமெடுத்துச்சித்திதேடலாமா அங்கே புத்திசொல்லலாமா அடாஇதுவெல்லாம் விட்டுவிடடா நாத்தைப்பிடுங்கி கடா உன்தொழிலைத்தொடடா தோல்கட்டியதடியையெடடா யாருக்கிருடாமா விருடா களத்திலப்படா காவலகொடடா புல்லறுடாமுரடா வழிதெரியாக்குருடா நான்சொல்வதுகேளடா இதுடா உன்செய்கை யென்று கல்லாவெறிந்துதடியாலடித்து வாயால்திட்டி தேள்போலேகொட்டி இவனொரு ஆல்போலேநின்றான் அவர்நாளபோகுதேயென்றார்.

வசனம்

நந்தனார் வேதியரைப் பார்த்து சொல்லுகின்றார் நீங்களென்னையடிக்கலாம நானும் அடிபடலாம் தங்களுக்குகைநோகுமென்று சொல்லுவார

கீர்த்தனம்-இ-ம்-கண்டகா-ஆதிதாளம்.

பல்லவி.

அடிக்கநருபோ லுனைமயே-என்னை-அடிக்கதுபோ லுனையே
அடிக்காலுங்கள்ளைகவலி யாதோ
அடிமையேலெசெய்யுமென்னுடன் வாதோ
படிசதெல்லாமென்மனதிற் படாதோ
பாவிபெனக்குபிளிமேற்றெரி யாதோ-அடி
நல்லவரேயுங்கள்மனதுபிர காம
நடக்காயலிருந்ததுமப சாரம்
சொல்லத்தெரியுமோயுனக்குப சாரம்
உயிர்தசாத்தியுங்களாலேபிந நேரம்-அடி

வசனம்,

ஐயனரத்தலைவணங்கிச்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

இலவுகாத்தகிளிபோ யாச்சே-நான்
எடுத்துச்சொன்னதெல்லாம் போச்சே
பறையன்சொல்லுபழு தாச்சே-நீங்கள்
பார்ப்பாரென்பதுமே லாச்சே
ஏழைச்சொல்லம்பல மாச்சே-தெய்வ
மில்லாமலெங்கையோ போசசே
சேரியேசொர்க்கமென் றாச்சே-தில்லைச்
சிதம்பரமென்பது போச்சே
விழலுக்கிறைத்தாற்போ லாச்சே-எந்தன்
வேணுமென்கிற்றெல்லாம் போச்சே
கண்டதைக்கண்டிட லாச்சே-நல்ல
காலமபிறக்காமல் போச்சே

வசனம்

பெரியோர்கள்கோபத்தை எளியேன்தாங்கேனென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பெரியோர்விசனமடையாரடைந்தாற் பெருங்கடல்நீடாதோ
பேயேன்றாங்குவேனோஇம் மாத்திரம்பொறுத்தாளையே

அல்லும்பகலுநாளைநினைந்துமேதோ வறியாமல்போனேன்
ஆசைகொண்டேன்றிருவம்பலதரிசனம் மோசஞ்செய்யுதையோ
பாவிப்பிறவிதொடர்ந்தடித்தாலுமென பாழ்வினைதீராதோ
பார்த்தவர்சொல்லாதவனன்றே பண்டைக்கதபோதாதோ
சிகம்பொசித்திருக்கிறச்சியையேயொருகு மெர்க்காற்கொடலமோ
திடமையரயகாவகொடலாமோசாதியில இன்னவனைனமேறு
இன்னமுந்தில்லம்பரம்போவேனென்று இலங்கைவருகிறேறு
ஒருமாட்டிப்போதுமையேயுடக்கலய விருந்தாலதுபோதுமே

இவை-ஐஞ்சீரடியாகவந்த-விருத்தம்,

சேறிலக்கவர் மேநியம்பிணைக்கால்
காருகளைநுநிற்பசோலைகின்றவன்கருத்தை
வாருலாவிப்பரமனைக்ருண் மலயுறுக்கி
நீரறியத்தகலும் ம்பபடிச்செய்தான்,

வசனம்.

தன்கலியருக்குத் தலைவணங்கி பெரியரும்பிடுபோட்டு ஒருசோலையிலிருந்து சமாதிபன்னிதன்னுடையசரீரத்தை இல்லைவெளியிலே கலந்துக்கொள்ளேலென்று விசாலைராக்கியமட்டத்துடனே சேரியில் வாராமல் தடுமொலியிருந்தார தன்னுடையதுயர்களையெல்லாம் அம்பலவாணருக்கே ஒப்புவித்து சங்கைகொண்டாடுவார்.

விருத்தம்.

வேதியரிப்படிசொல்லவெந்த மனம்வேறுகிளிலையோவென்று
சாதியிலேபாவமதகீசனன்றோ பிறப்பித்தாய்சுவாமி உன்னை
மேசாதனையேசெய்கின்ற எவ்வுயிர்க்குமவ்வுயிராய்த்தோய்க்திருக்கும்
ஆதிகுருவல்லவோநீ பார்ப்பானுக்குள்ளிருந்துமனுப்புவிரோ.

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

ஐயர்வுன்னையடைக்கலம் பொய்யாகியதேகமடைக்கலம் ஐயா

அந்தாநான்வருவேனோ அம்பலத்தைபெருவேனோ
சகோயாகிலுங்காண்பேனோ சந்நிதானத்திதன்செய்வேன் ஐயா

விருத்தம்.

சாதில்லா தரிப்பிறவியைத் தாவொடுத்தருளி
நாயபட்டனைத்திழுக் குலமாகியித்துண்டைய
நீறுபட்டிடுமெல்லவோ தில்லையினின்றால்
பேறுபெறுமிவே னதற்குமொருபிரகோ

கீர்த்தனம்-ரு ம்-எதுகுலகாம்போதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயோதெய்வமேயிந்த வையர்க்கடிமையானேன்
செய்யாவினைசெய்தல்லவோ
உள்ளங்கரைந்துருகி உய்யும்படியாய்கேட்கில்
கள்ளக்குமரனல்லவோ
ஆலைக்கரும்பதுபோ லாச்சுதங்குமுழுதும்
வேலைக்கிடமுமில்லையே
கோவில்கும்பத்தைக்கண்டால் கோடிவினைகள்தீரும்
பாவிக்குக்கிடையாதுகாண்
தில்லையம்பலவாண தெய்வப்புலையர்க்காக
கல்லாச்சமயலாச்சுதே
பொன்னம்பலவாயுன்னைப் போற்றும்வகையில்லாமல்
இன்னம்பிறவியோறுமோ
அன்னைதந்தையும்நீயென்றுவிபொருளுமநீ
உனசந்நிதிவரச்செய்வாயே

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடிமுடியொன்றுமில்லா தம்பலத்தரசேயுன்பால்
கொடியனுன்வந்தாலென்ன குறையுமோவதனால்நீதி
நடலைசெய்பார்ப்பான்கையில் நடுங்கவோவிடுத்தாயென்றும்
படிமிசைவீழ்ந்தானடிப் பதறுவான்கதறுவானே.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-யமுனகல்யாணி

பல்லவி

செய்யுமுபாயமறியேனறியேன்
அரகரசிவனே தில்லைச்சிவனே செய்யு

பத்துவருடகாலமாகவந்து பார்ப்பானைக்கேட்டேன்
சித்தமிரங்கிப்போய்யாவென்றொருநாலமேசேதிசொல்லக்காணேனேயே
பாவிபுலையனாய்ப்பிறந்தேனே இந்தபாவினிலிருப்பேனோ
ஆவிதவிக்குதே பொன்னம்பலவா வுன்னடிக்கமலங்காணேனேயோ செ

பல்லுமுளைச்சநாள்முதலாக இந்தப்பாடுபடுவேனோ
தில்லைநாயகா கனகாவென்றுன்னைத் தேடும்வகைகாணேனேயோ செ

காற்பதுவேலிநிலமிருக்கிறதை நடுநேவணுமென்றார்
கார்ப்பதாருக்களைபிடுங்குவதாரென்று கடுத்தப்பேசக்கடியேன் செ

ஆறிலேகுளத்திலேவிழுவேனென்று வலைதப்பிடித்திழுத்திடுவேன்
பார்த்தவிருக்கிருபைசெய்யாவிடிற்பறையன்பாபம்விண்மேபாகாதுசொன்னேன்-செய்

தில்லைச்சிதம்பரத்தைக்காணுவிடிலென்தேகமதெளிந்து
சொல்லிவிட்டேன்பொன்னம்பலவாவுன் சொர்ணசபைக்குவருவேனோநான் செய்

விருத்தம்.

கடுநிலவருநதியும் பணிகலனுகவுங்கற்றைச்
சடிலமேவியபுரவியுனற்றரிக்கவுந்தகுமோ
விடுவதில்லையுன்னருளி னிற்றொருவேங்கைக்
கொடியன்வந்திடுதிலென்னதில்லையிற்குறையா.

இதுவுமது-விருத்தம்.

மாவளர்தில்லைமாநகர்வீதியும்மதிலும்
கோயிலுந்திருக்கூட்டமுங்கண்டுகண்குளிரப்
பாவியாகினேன்காயத்தை யேதுக்குப்படைத்தே
னுவிதானிருந்தும்பரகதியடைந்திலனே.

ஆதிநாள்முதற்றவம்பெருமாமுனிக்காக
நாதமோங்கவேநாடகம்புரிந்திடுநாதன்
பாதம்போற்றியென்னேரமும்பாவியானந்தன்
வதந்திரவேகனவிலுமீசனுமிருந்தார்,

வசனம்

இல்லைத்தலத்தைக்காணாத ஜென்மமிருந்தாலென்ன போனாலென்ன வென்று நிச்சயம்பண்ணி மனதுருகிவாடும் வேளையில் சொப்பனம் நித்தி ரைபோலமேலகண்டு அங்கித்திரையில் அம்பலத் தேவன்வந்து சொல்லு வார்,

கீர்த்தனம்-இ-ம்-எ துருலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

கனவினில்கண்டாரேநந்தனார் கனவினில்கண்டாரே

அனுபல்லவி

மனதிலேபபோதும் நெருந்திபடிபணியுங்
கனகசபேசனை கண்ணாறுறகாணுமல்- கன

சரணங்கள்.

நீநடுங்கழனிகள் நானடச்சொன்னேன்
ஊனமில்லாமலுன் னுடையவன்களிகக
மானிடப்பிறவியி லுனைக்கிணையார்பத்தி
மாணில்லையெனத்தில்லை நாதனும்வந்தாரக்க -கன
கங்குல்பகலாய்க் களித்தமின்னருளாற்
சங்கரனேயென்று சாருநன்னிலையால்
அங்கம்புளகிந ாமாச்சுதுஅதனு
லிக்கேவந்தேனென்று ஈசனும்புகல- கன

விருத்தம்.

அறிவுமிகுந்தாற்றலுடன் சிவபெருமான்பெயர்சொல்லி யாற்றுநாளில், கருமருவுமிடறழகன் ஈனதடிமைவெறியகக்கனவில்வந்து குறையறவே கழனிகளைநடச்சொன்னோமுனக்குவிடை கொடுத்தேனென்ற மறையோ துறயர்க்குறைதது நீவிரைந்துவாவென்றுமனதுட்சென்றார்.

நந்தனார்கனவில் நடேசமூர்த்திசொன்னவசனம்.

நம்முடையநந்தனாரே உன்னிடகழனிகளை நமதுபூதகணங்களாலே நடச்சொன்னோம் வேதியருக்குக்காட்டினால் உத்தாரக் கொடுப்பானென் றசொல்லி தான்அம்பலத்தேசென்றார்.

கண்ணிகள்.

களையடாமல்சலம்விடாமல் கதிரொருமுழங்காணுமாம்
களிக்குதுபயிரிருக்குதுஅதைக் கட்டுகட்டவேதோணும்

பழுதிலாமலேயிருளக்கள் பள்ளயேடுதண்ணியாம்
பாபவிவனைபபளிபுமநந்தனுர் பயிரிடுக்கிருப்பண்ணையாம்
கனவில்வந்தானவாமாயி கருணைமாரிகலன் [illegible]ளன்
கட்டிக்கட்டுவேடிப்பிடன் காவலவென்றுசென்றனன்

விருத்தம்.

அய்யரேவாருமென்று அழைத்திடும்நந்தனைத்
துய்யவேறுயிருங்கண்டு தொல்புவித்தெய்வமெல்லாம்
பொய்யிதுவெனமுதள்ளிப் புலையனும்நந்தனெனறு
செய்யவேண்டியதுசெய்யச் செப்புவாரொப்புவானே

பலவிதஇராகங்கள்சேர்ந்த கீர்த்தனம்-இ-ம்-வராளி-ஆதிதாளம்.

பல்லவி.

வேதியர்சொல்லுதல்.

நந்தாவுனக்கென்னமதி வந்ததென்னதந்தாரு-நந்தா
அந்தரங்கஞ்சொந்தமா யிருந்ததுமறந்துபோய்
மிக்கையாய்நினைத்ததன்றோ அந்தவேளைபுத்தியில்லை-நந்தா

தோடி.

தொல்லைக்காட்டிகரிபோலே ப்ல்லைக்காட்டிபேசுவாய்
கல்லைக்காட்டி காடாக்கொண்டு சொல்லைக்காட்டியேசுவேன்
[illegible] மில்லையென்றுபோச்சுகா
[illegible] மொல்லுகிறமாச்சுதே
[illegible] வற்றதுவுணர்ந்ததா
பக்திபுத்திகலந்ததா கத்தனுமபறந்ததா
எட்[illegible] மெத்தமெத்தசந்தோஷம்-நந்தா

மத்தியமாவதி.

[illegible]ப்படிசொல்லாதே தப்பெடுத்கடிப்பையா
[illegible]டிவொப்புதலாகக் மெப்படிநடப்பையா
கள்ளக்கும்பிடென்னடா காரியங்கைக்கொள்ளடா
[illegible]னக்கொல்லையகாரடா எங்குஞ்சுற்றிப்பாரடா
[illegible]குற்றம் தெளிந்துபாருகுற்றம்
கையலயகொட்டுசத்தம் கண்டுகொள்ளுநித்தம்

ஊனுறக்கமேயின்பம் ஊனிழந்தாலேதுன்பம்
சாணவயிற்றுக்குஆப்பு சாதிரமானமையப்பு
ஓமோபயேமேல சபாசுகஸ்மேகொண்டாப நக

கேதாரகௌளம்.

குருகாட்டிதோற்றவன்போல் வாதாட்டிநிற்பவர்க்கு
மெய்யதாந்தசாஸ்திரங்கள் காதாலேகேட்டிருந்தா
என்னகாரியம்அதில்என்னவீரியம் தன்னுதன்னு நக

புன்னாகவராளி.

இல்லையென்பதுகாட்டிலுண்டு கேட்டதில்லையா
தேகமபட்டால்புண்ணுமீப் பார்த இல்லையா
அம்பலமாவதுஆகாச முற்றும்பயமா
அருளில்லைபொருளில்லை கண்டுசேரு
பக்தியென்றும்சித்தியென்றும் வற்றியென்றும்முதந்தியென்றும்
இத்தனைநான்சற்றகை அத்தனையும்பிதற்றபாச்சு
மாறுபாட்டுக்காரன்வார்த்தை கூறுமோ
தாறுமாறுபேசினதால் சேருமோபோடுமோ நக

நாதநாமக்கிரியை.

எல்லாமுழுப்புரட்டு வல்லான்வகுத்தவழி
சொல்லாதேசும்மா நில்லாதே
காரியத்தைப்பாரடா உனக்கிணையாரடா
காசுபணஞ்சேரடா இதுநல்லஊரடா நக

மாஞ்சை

கஞ்சுகூழ்குடித்தாலும் பஞ்சமில்லையே
கொஞ்சமிருந்தாலும் சஞ்சலமென்ன நக

மத்தியமாவதி.

சம்பாநெல்கிடக்குதுனக்குத்தாரேன் ஒற்றைச்
சல்லாகிழிச்சுனக்குத்தாரேன் ஒற்றைச்
சண்டாங்கிச்சேலையொன்று தண்டாப்பக்கிடக்குதந்தன்
பெண்டாட்டிக்குக்கொடுத்து நன்றாய்சுகமாயிரு நக

புன்னாகவராளி.

தூட்டுவெட்டுபோக்குதின்று தண்டைவெட்டிபார்த்தையா
கண்டாணடிக்கட்டளையில் முண்டிருக்குபார்த்தையா நக

மோகனம்.

தாரணியில்லாதவனொரு மாணியில்லாதவன்போலே
தோணிலுந்தோணுது கோணிநடந்தாலுமென்ன

பெண்டாட்டியில்லார் | சுகமல்லவோ மனம்
கொண்டாட்டம்கொள்ளா | ததைச்சொல்லவோ நக

ஆரபி.

ஏருபிட்டோழுதவால் | மறுவிட்டுத்தேவையில்லை
ஏதும்வெட்டிஞாஞகாக்குக் | குருவிட்டுப்பார்கம்லஞ்துணைய
நிலைமாயாரகேட்கட்குப | புரைபோயிதுவலலால்
வேறேபுன்டோயிறைச்யபிக்தலுருகஇது | கலலவிகாயே நக

அசாவேரி

முனைக்கால்பிளைக்கதாலுல் | சேலைக்குக்காறும்
உலைதுகூலிக்குக்காறும் | குழந்தைபாலுக்குக்காணுமல்லவோ
வாருககுவிக்கநிலமுசப்பைபோயே | லாரியிடவேணும்நீதகுபயை நக

சாவேரி.

வாரிருகாலைசுற்றிப்பாரு | கோரைப்பிடுங்கும
பேரியையுமூகச்சொலலு | விரியைகடுகச்சொல்லு
செட்டியார்குளத்தகருகே | மூட்டிருக்கப்பேர்த்தையா
வெட்டியாளாகத்தகருகே | கி பருககப்பாரதுதைபா நக

புன்னுகவராளி.

எல்லாமுளைதுபொறுப் | பொல்லாமுன்துச்கம்
மல்லாமல்வேறேகதியில்லை | இல்லைஇல்லை
கட்டியடிக்கட்டளையில | விட்டதுமுளைத்துதா
பொட்டதுமேலேதட்டையிலே | கட்டதுபலித்துதா
காடுவெட்டிகருஞ்சவங்கூறு | மாக்கட்டிலவைகேள்போடு
பாடுபட்டமுைதாலம்மேரு | வீடுகட்டிவாழலாமா நக

வசனம்

இப்படிசொல்லும் வேதியரை பண்ணையைப்பார்க்கவாருமென்றுக ந்தனர் கூப்பிடுவார்

விருத்தம்

பண்ணைபாளையும் பாருமென்றழைக்கப்பரிக்து
கண்ணுலாவியவேதியன் களிப்புறத்தனுள்
பண்ணுலாவும்பொன்னம்பலகூத்தனைப்பாவி
எண்ணிலாவமுங்காதல்கொண்டிருந்தனர்தாமே

வசனம்

கேவலமாகிய நீசன் சிவகணங்களாலே ஒருநாழிக்கைரியில் நடவுநட்டு அறுப்பறுக்கும்வயலை வேதியாகண்டு ஒன்றுந்தோன்றாமல் உலகவாசனை யற்றாநின்றார்

வசனம்

நந்தனார் அம்பலவாணனைக் கொண்டாடிக்கூத்தாடுவார்

கீர்த்தனம்-கடுக்கா.

நந்தனைக்கபரிதானுன் நந்தனாரும்ஆனந்தமாகினார்
சொந்தமாலையபலவந்துபார்க்கையில்
சிந்தையாச்சுது பலபந்தம்போச்சுது
சிந்தைதீரவேயந்தரங்கத்தின் நந்தனு
நீச்சசாதியென்றுபேசிப்பேசுமிந்த
தோசிமேதியனுமாசையாகவே
தேசமெற்றுநில்லை வாசமாகுகட
ராசமூாதநிக்குதாசனென்றவரும் நந்தனு
வாருவாருமிதைப பாருமபாருஞ்சிவ
னுமே வந்துசெயுங் காரியங்களிது
பாரின்மீதிலிவனையாருமில்லையென
ஊரிலுள்ளபெரியோருஞ்சொல்லச்சொல்ல நந்தனு
சித்தமீதிலொரு குற்றமேதுமில்லை
சுத்தமானவிதயத்திலுள்ளசிவ
பத்திபண்ணிவெகு சித்தியாகிவர
முத்திதேடிவருபத்தனென்றுமகிழ் நந்தனு

வசனம்.

நந்தனைப்பார்த்துசிவபத்தர் அபசாரமபண்ணினேனென்று மிக வுந்துழைந்துசொல்லுவார்.

தரு-இ-ம்-பியாகடை-அடதாளசாப்பு.

பல்லவி

நந்தனாரேயுன்றன் பெருமையின்றுகண்டேன்
நானென்வினையை விண்டேன்

அனுபல்லவி.

விந்தையைக்குறியாமல விழலனுனறியாமல்
விம்புக்குக்கச்சுகட்டி வீசினேனென்னையாளும்- நந்த

சரணங்கள்.

அறியாமனத்தினாலே ஏதோபசி யான்
அருமையைத்தெரியாமற்போனேனே மெத்த

சிறியோர்செய்தபிழைபெரியோர்பொறுப்பரென்று
செப்புவார்த்தையுமக்கோகளவானே — இந்த
முறையுணர்ந்தோர்க்குளென்னதாய்செல்லக் — கேளாறும்
முடன்மேற்றிருப்பணிவதமுழுதுமொரேகட — வேணும்
நிறைவுற்றவருட்பெற்றோர்க்கேதுகிராய் — காணும்
நினைக்குமுன்னடிவணங்காதோருந்துயர் — வேணும் நந்த
கேற்றப்பொழுதளவுந்நம்மாவிருந்த — இந்த
நிலங்கள்முற்றும்பயிர்கள்முளைத்துக் — கதிக்கச்
சாற்றுங்கதிர்கள்முற்றிச்சாய்ந்து — அறுவடைக்குத்
தக்கதாவிருக்குதேமிகக்களைத்து — உமது
ஆத்தல்தனக்குநிகராவரோ — யாவரும்
ஆய்பாவுனதுநல்லருளால்நலமே — வரும்
நாற்றிசையோர்களும்நாடிப்பணிய — வரும்
நாயேன்களிக்கமனம்நாந்துகிருபை — தரும்-நந்த
குண்டைகளுக்கலப்பைக்கோலுக்காரும் — விதையும்
கொட்டத்தில்லிருக்கநீர்செய்திரோ — அந்த
அண்டர்பணிதில்லையாண்டவனே — யுமக்கு
வடிமையாளாயிவந்துசெய் — தாரோ
உண்டத்தைதானெனறெண்டுக்குமமைக் — கொண்டேன்
தொல்லுலகத்துள்ளோர்யாருமேசக் — கண்டேன்-நந்த

வசனம்,

என்றுவேதியர்சொல்லிப் பின்னுஞ்சொல்லுவார்

இதுவும் வேதியர்சொல்-விருத்தம்,

கறைபடுங்கண்டன்றாளைக் கருத்தினிற்பெறவேநோக்கி
குறையருந்நந்தனருக் குலமதுயிழிவென்றெண்ணி
மறைபுகல்பெருமையாலே வருந்தினேன்கொடியனென்று
இறைபடுவளம்போலஞ்சி யேங்கியேயாற்றுவானே

கீர்த்தனம்-இ-ர்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

குற்றமெத்தனைசெய்தபோதிலுமுந்தன் சித்தத்தில்நினையாதே சிவ
பத்தனென்றறியாமல் பதறிவார்த்தைகள்சொன்ன பாவந்தலையாதே

புலையர்கள்பரகதிசேருமபடியவர் புண்ணியஞ் செய்வாரோ-உன்னை
கலிதீரக்கண்ணாறக்கண்டோர்களெல்லாம் காட்சிபெறுவாரோ
ஒருவன்மனதறியவொருவனுபாகாதென்றுலகம் மொழியாரோ அது
திமோச்சுநினியர்தன்சென்மசபலமாச்சு தெயவருமிறங்காரோ
ஜாதிநீதிகுலஞ்சாஸ்திரங்கிடையாது சநதோஷப்படலானோனுப்போ
ஆதிசிதம்பரரகசியம்பாரென்று அனுப்பிடலானான்

வசனம்

இப்படிமிகவும்வணங்கிவரலாற்றைக்கேட்டநாளைப்போர் கனவிலே ஈசன்வந்து கருணைசெய்தாரென்றார் அதற்குநாளைப்போவாரைப் பார்த்து வேதியர்சொல்லுகிறார்

கீர்த்தனம்-இ-ம-யமுனகல்யாணி-ஆதிதாளம்,

பல்லவி

நந்தாவுன்கனவினிலெப்படிவந்தார்
  வரந்தந்தாரென்றாய் நந்தா
சந்ததமுஞ்சனகாதிமுனிவர்தொழும்
  சச்சிதானந்தமூர்த்தியல்லவோ நந்தா
ஆதிமுடிவுக்கிடையாதபராபரஞ்
  சோதியல்லவோநீச்சாதியென்றறிந்தும் நந்தா
அண்டாண்டமிறைகின்றசபாபதிக்
  கொன்றுபேதமில்லையென்று நந்தா

வசனம்.

வேதியர்செய்தபிழையெல்லாமபொறுத்துக்கொள்ளுமீரென்று சொல்லநந்தனார் மறுவுத்தரவுகூறல்

கீர்த்தனம்-இ-ம-தெண்டகம்-எதுகுலகாம்போதி;

வேதியர் ஏழைப்பார்ப்பான்செய்திடும்பிழைமுழுதும்
  யேந்துக்கொள்ளாதே நான்
  இனமறியாதவன்முன் புத்திக்காரனென்பதுவும்பொய்ப்போ
நந்தனார் பொய்யாகியவிந்தவுலகத்தைப்பார்க்கும்
  புண்ணியவானே நான்
  புலையனுக்காளடிமையல்லவோ புத்தி சொல்லுமையே

வேதியர் புத்தியுண்டுவித்தையுண்டு
பத்திகிடையாது உசலால்
புலம்பினதாலென்னமனமடங்காதுபோகவிடையாது

நந்தனார் கிடைக்குஞ்சிதம்பரதெரிசனமெய்யு
கிருபைசெய்யு மையே
கீழ்குலமல்லவோ நாயினுங்கடையேன்கீர்த்திபெறுவிரே.

வசனம்.

பரமபத்தனாகிய நீயெனக்கு அடிமைவேலைசெய்பவன்போல வந்தபடியினாலே என்பிறப்பிணி தொலைந்ததென்றுசொல்லுவார்

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அப்பொழுதுபோனதன்றிமறைமுடிவையுளங்களிய
யறிவிலுன்னித்
தப்பொழுதுகணப்பொழுதுக்கண்டறியாப்பாவியெனைச்
சார்ந்தாரன்றோ
சிவக்கொழுந்தினடிமையென்று பெயரிட்டுவேலைகளைச்
செய்ததாக
பவக்கடலைக்குளப்படிபோலதாண்டிவரச்செய்ததுந்தன்
பத்திதானே

கீர்த்தனம்-இ-ம் ஆனந்தக்களிப்பு.

நந்தாநீசிவ
நம்பாமலேமோசமானேனுன்
பூமிக்குள்நீயொரு
பூமிகுருநாதருசாஸ்திரப்பிர
சாமிக்குள்ளேவெகு
கண்டுதெரிசித்தபேர்களே
படித்துமென்னவேதங்கள்
பார்த்ததில்லையிந்தபகவன்
எடுத்துச்சொன்னாய்சிவ
ஏற்காமல்போச்சுது
தெவிட்டாதேதேசாகம
தேகமுழுதிலுஞ்சிதன்றிரு

பதத்தின்-உன்னை
பித்தன்
சித்தன்-இந்தப்
சித்தன்
மத்தன்-உன்னைக்
முத்தன்-நந்தா
வேதம்-அகில
கீதம்
போதம் - அந்த
என்பிடிவாதம்-நந்தா
பாணி-உந்தன்
மேனி
--

பறையாயிவாரு கூளி-போலே
 பழுத்தசேறுமுலுங்கியாத்தும் ஞானி-நந்தா
பவசாகரந்தாண்டிச் சென்றாய்உள்ளே
 பார்த்துணர்ந்துபரமானந்தங் கொண்டாய
தவமானியேபோலே நின்றாய்-இல்லே
 தாண்டவராயனைக்காணுமல்நீ கண்டாய்-நந்தா

வசனம்-

இப்படியே வேதியர்சொல்லும்போது நந்தனும்மனம்நொந்து கை காலநடுங்கி ஐயரைச்சுற்றிவந்துவணங்கினனக்குமுன்னங்கொடுத்து ஆடை யளித்து இதுவரைநாளும் காப்பாற்றினபெரியவரே உங்களுக்கடிமை வே லைசெய்யுமென்ன இப்படிப்பெருமையாய்ச் சொல்லவேண்டா மென்று சொல்லுவார்

தரு-இ-ம்-கலியாணி-ரூபகதாளம்,

பல்லவி,

ஐயாசொல்லு வேனோ-உம
தடிமைப்பறையன் தானே

அநுபல்லவி

மெய்யாகவேயிந்தனிவாழ் வோர்கள்
வேலைசெய்யூழியர் தம்மையோதாம் வாரகள்-ஐயா

சரணங்கள்

வேம்புக்குயர்ந்தமதுரங்கள் பூட்டினும்
 விறுமதன்குணமமாறுதென நாட்டினும்
ஆம்புதநிக்காரரென்றுவேலையாவ துண்டோ
 அய்யனருளையல்லாமலும் வேறுண்டோ ஐயா
மேவுங்கிளைததண்டுமேருவைத் தாக்குமோ
 வீசுங்கதிர்மின்னும்பூச்சி யோக்குமோ
ஆவதழிவதெல்லாமையன் றன்னுலே
 ஆச்சுதென்றாலென்ன ஆச்சுது என்னுலே ஐயா
முன்னமேசெய்தவினையின் வசத்தாலே
 மூடப்புலயனுற்பேவி யதனுலே
இன்னம்பவேதுன்னின்னமும் வேண்டா
 ஏந்திக்கொள்ளுமென்றனைக்கெடுக்க வேண்டா ஐயா

வசனம்.

நந்தனார் தனதுஆண்டையாகிய வேதியனைப்பார்த்துத் தங்களுடையகுருநவாக்கினால் என்னையுயிர்ப்படிப் புகழலாமாவென்றுமிகவும்வணக்கமாய்ச்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-அடாணகல்யாணி

பல்லவி.

சின்னசாதியல்லோ சிதம்பரம்போய் நான் வருகிறேன்னான் சின்
ஆனந்தனைதயொருவரில்லே அடைக்கலமென்னையாளவேணும் சின்
நாமில்லாநெஞ்சமாய் இறைநம்பியின்றவுடல்பெருத்த சின்
அல்லும்பகலுமதுவையுண்டு அறிவுமயங்கிபாட்டங்களும் சின்

வசனம்

இப்படிசொல்லிய நந்தனாரைப்பார்த்து வேதியர்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம-பைரவி-திரிபுடைதாளம்,

பல்லவி

ஆருக்குப்பொன்னம்பலங் கிருபையிருக்குதோ
அவனேபெரியவனும்

அனுபல்லவி

பாருக்குள் வீரன் மாகேள் ஆகேள்
பணமிருந்தாலவன் பெரியவனுவானே ஆரு

சரணங்கள்,

வேதபுராணங்களோதினதாலென்ன
வேலைநுட்பங்களமாதரமவென்னகாரியம்
சாதனையுங்கலைராமதாருநாளும்
மன்றுளைபெண்ணையைசபொல்லாது
பாவமகங்களடங்கவேசெய்தகோ
பாலகிருஷ்ணனைதினந்தொழுமம்பல
வாணனென்றுகாவாய்விரும்பாதன
வாவைராகிலுக்தான்தனபின்னவன்

வசனம்

பொன்னம்பலஞ் சிவபத்தியுள்ளவன் பெரியசாதிசிவபக்தியில்லாதவன் பார்ப்பானுயிருந்தாலுஞ் சின்னசாதியானபடியினாலே திருப்புன்கூரிலுனக்காகப் பரமசிவன்சந்நிதியைவிலக்கி தெரிசனங்கொடுத்தும் குளம்வெட்டினது ஒருநாளுஞ்சிரிகாலத்திலே காற்பதவேலிநிலமும் நடராஜமூர்த்தியேவந்துகடவுட்தன்மை பார்க்குமபோது நீயே மகா புண்ணியபுருஷனென்று சொல்லவேணுமேயல்லாமல் வேறில்லை-நீயிதுவரையிலெனதுவார்த்தையைதள்ளினதுமில்லை ஆகையால் எனக்குகுருவாகிநின்று உபதேசம்பண்ணென்று பின்னுஞ்சொல்லுவார்]

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்

பல்லவி

நந்தா நீ குருவுபதேசம்நயிவிட வேணும் நானகடைத்தேற நீ
நொந்தானான்கதிபெறமாட்டேன்
நோயெனுமப்பிறவிக்கடலிடைவீழ்வேன்
மகாரப்பூவெடுத்தானூர் மலரடி சாற்றிலாழ்வென்னறிவு
சிந்தாமலவரதத்ரமேவனும் சிதம்பரசகியக்தெரிசித்திடவே
வைத்தாக்கருலைக்கடலுன்மன்றிற் சென்றுநிர்த்தனம்புரிந்து
ஒத்தாசைபூககணங்களுரிமையுடன்வந்தாழியஞ்செய்ய
பெற்றுநீபெரியவனுந்தன்பெருமையைநானறிவேனேழு ன்
கத்தாமுல்மோசமதானேனம்பிக்கை சொன்னேநற்கதிபெறவே நந்த

கலிவிருத்தம்

வேதமோட றஞ்செய்திடு நூற்களைவிதித்தும்
ஆசனுகிஉன்னடியவர்க்கஞ்சினமடைய
பாதகம்புரிந்தேனென்றுந்தனைப்பாவி
வந்திரமேவேதியருபசரித்திருந்தார்

வசனம்.

இப்படிசொல்லிய வேதியர்வார்த்தையைத் தள்ளப்படாமையால்கு றிலந்துதலைவணங்கி ஒருமூலையைநோக்கிச் சொல்லுகிறுப்போல் சொல்லுகிருள்

கீர்த்தனம்-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்

பல்லவி?

ஐயேமெத்தக்கடினம் உனக்கடிமை ஐயேமெத்தக்கடினம்

அனுபல்லவி,

பொய்யர்தபொன்னம்பலத் தையாயிருக்குமிடம்
கையாதமனிதர்க்கு உய்யாதுகண்டுகொள்ளும் ஐயே

சரணங்கள்

பாலகிருஷ்ணன்பணிந்திடு சீலகுருசிதம்பரம்
மேலேவைத்தஆசையாலே காலனற்றப்போவனென்று
சாத்திரம்நல்லக்ஷேத்திரம் ஞானநேத்திரங்கொண்டு
வாசியாலேமூலக்கனலில் விசியேசுழன்றுவர
பூசைபண்ணிப்பணிந்திடு மாசற்குண்டலியைவிட்
டாட்டுமேமனமுட்டுமேமேலோட்டமேவழிகாட்டுமேயிந்த
மானுபிமானம்விட்டுத்தானுகிநின்றவர்க்குச்

சேறையிலேபோல் ஞானநெறியதியுண்டு
பாருமேகாட்டிக்காருமேஉள்ளேசேருமேஅதுபோதுமே அங்கே
சமயமாமலைமேலின்று பொங்கிவருமபாலுண்டு
அங்கிருப்பாதிகொண்டு கங்கைபொம்மைபோலவே
நில்லுமெனதுஞ்சொல்லுமேஞானஞ்சொல்லுமேயாதும்வெல்லுமே
அட்டாங்கம்பண்ணிறாலும் கெட்டாக்கபண்ணியது
பிட்டாதுபிட்டவரவொட்டாமுட்டியது
பாயுமேமறைதேயுமேஅதுவோயுமே உள்ளதேயுமேவேத
மந்திரத்திலேயுமில்லை அக்கரத்திலேபய
தானமேஅதுதானமேமலைமேமேபேசாமோனமேஅந்த
முப்பாழுநதாண்டிவந்து அப்பாலேநின்றவத்து
ஒப்பாரையிடையாது ஙப்பாதிருந்தன
பாடுவார்தாளமபோடுவார் அன்பர்கூடுவார் இசைபாடுவார
கண்டாருமில்லையாது விண்டாருஞ்சொன்னதில்லை
அண்டாண்டகோடியெல்லா மொன்றாய்ச்சமைந்திருக்கு
மல்லவோ அதைககொல்லவோ பறையன்சொல்லவோ
சொல்லவோநோமாகுதல்லவோ

கலிவிருத்தம்

வானவெளியவும்பாயாழ்த்தியமறையைக்
கானமேசெய்யும் வேறேயுமக்கடுமை
ஈருமாமிழிகுலத்தினிலெய்தியநந்தன்
ஞானவாரிகொண்டேயவாருளுறநினைந்தார்

வசனம்

இந்தப்படிநந்தனர்சொல்ல வேதியாகேட்டு திவ்வியஞான மடைந்து நந்தனைப்பார்த்துச்சொல்லுகிறர்

கீர்த்தனம்-இ-ம்-சாமா-ஆதிதாளம்

கண்ணிகள்!

சிதம்பரம்போய்நீவாருமையா நான்
செய்ததெல்லாமபசாரமையா சிதம்
சிதம்பரம்போவீர்பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம்நந்தனேயினிமேல்
எத்திசையிலுமுமகதிைசொல்லப பேரமோ
பத்தியமுதலென்றுபழகியபெரியவத் சிதம்

சித்தமுந்தெளிந்தது தெய்வமேதென்று
புத்தியும்வந்தது தெரியிதுவல்லவோ (சித்)

வசனம்.

இப்படிச் சொல்லிய வேதியரைச் சுற்றிவந்து தலைவணங்கி நமிக்க வணக்கத்துடனே தூரவிலகிநின்று வேதியரை ஆசிர்வாதம்பண்ணச் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-ஓரடியிலிரண்டுவார்த்தை-தாக்கடா.

நந்தனார்.	வேதியர்.
சிதம்பரதெரிசனங்கிடைக்குமோ	கிடைக்கும்
ஜென்மசாபல்லியமாமோ	ஆகும்
பதம்பெருந்தவநெறியறிகிலேன்	அறிவிர்
பரமனருள்செய்வாரோ	செய்வார்
ஜாதியிற்றாழ்ந்தவனல்லவோ	அல்ல
சாத்திரமுறைமைக்குஞாயமோ	ஞாயம்
ஆதியாம்பலதெய்வம்நாடுமோ	நாடும்
ஆனந்தமடைவேனையயரோ	அடைவிர்

வசனம்.

வேதியர் நந்தனருக் காசிர்வாதம் பண்ணி யனுப்பியபின்பு நந்தனருடைய குணாதிசயங்களைக் கொண்டாடுவார்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

அடியவர் மனமிடியப் பேசினதுண் டபராத
மனந்தங் கோடி
படுநரகில் வீழ்வாரென் றெனவுரைக்கும் பாவமது
பலித்த தென்று
துடிதுடித்து தொடைநடுங்கி நீர்வடிந்து சிதம்பரத்தே
துதிகள் செய்து
கடிபுகழுந் திருத்தொண்டர் குணமெல்லா முலகறியப்
பகருவாரோ.

இதுவுமது.

சாஸ்திரக் குப்பையெல்லாந் தள்ளினேன் பதருபோலே
காத்திரஞ் சுத்தமாச்சு கனிந்திடு முள்ளம்பத்தி
பாத்திர மிருந்தாற்போது மற்றொன்று மில்லைசைவ
க்ஷேத்திர முழுதுஞ்சுற்றிச் சேருவேன் றில்லையென்றார்.

இராகம்-இ-ட-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி.

எந்நேரமும் நந்தனைச் சிந்தித்தா
ரந்தணருமெதிருந்தவரந்தணார் (எந்த)

பந்தந்தீரவே யிந்தவுருவாகி
வந்தோமெனத் தந்துபோதிவனென் (எந்த)

வசனம்.

விட்டதோ இந்தவிட்டுக்கவலைகள் பட்டதோ பறைசாதிச் சேர
யின் நீட்டதோ முந்தியெல்லாம் கரை புரண்டதோ வென்று எத்திக்
கொழுபவர் எந்நேரமும் வேதிய ரிப்படியே சிவபக்தி பண்ணிக்கொ
ண்டு ஆனந்தமடைந்திருந்தார். அப்படியிருக்க நந்தனர் ஆதனூரை
விட்டுச் சிதம்பரம் வருகிறார்.

இராகம்-இ-ம-லாவணி-ஆதிதாளம்.

நந்தன்சிதம்பரம்வருகிறார் ஆதனூரைவிட்டு
கொள்ளிடங்கண்டு அப்பால் வருகையிலே
கொண்டாடும்பரவசமாய் எங்கும்பொங்கிச்சிவமாய் (நந்த)

அந்தக்கருணை விருந்தியழிந்து
அநேகஜென்மவாசனையை
யனல்கொண்டுதகித்தாரே சஞ்சிதவினையென்றவருந்தாரோ (நந்த)

குண்டலிசத்தியைக்கொண்டு
கிளம்பிமண்டலம்புகுந்து
சஞ்சாரித்துக்கொண்டார் குறையவமுர்தமுண்டார் கிளையார் (நந்த)

அறுதிமாய கற்பிதமிங்க
நாமரூபாதி பிரபஞ்சமெல்லா
மழிந்துபோமென்பார் குறைகட லெழுந்ததுவாயென்பார் (நந்த)

சைவத்தலங்களிற் றெய்வமிதுவே
சத்தியப்பண்ணுவேன் நான்பறையன்
சதுர்மறை கேட்டிலையோ மிக்க ஈசன்பதங்கேட்டிலையோ (நந்த)

எப்போதும்நடராஜமூர்த்தியின்
இணையடிதொழுதார்க் கிடையுமோ
லிங்கிரபதிகையோ திரும்பியும் வந்தவர்காண்கிலரோ (நந்த)

காண்கருணா வேசமிலாதவ
னைத்தவிலாடகன்கற்றநூ
வெட்டவெட்டநுங்கொம்பு நெருக்கித் தொட்டால்செங்கரும்பு (நந்த)

ஆதனூரிலொருபுலைய னுக்காக
அம்பலநாடக மாடுவரோ
வருந்தவம்புரிந்தேனோ வனவில் வருந்தியுமிருந்தேனோ (நந்த)

அரகரசம்பு சதாசிவனேயென்
னம்பலத்தாடிய தேசிகனே
ஐயேயுன்னடிமை மனது நைந்தேனுன்னடிமை (நந்த)

செழித்துவியநல கெட்டிச்சிகரங்க
ளெந்தாந்தெரியுது காணையே
தில்லைத்தலமென்பார் அன்புடன் சொல்லப்பலமென்றார் (நந்த)

குதிப்பாரொருதரங் களிப்பார்கண்ணி
ரருப்பாருனந்த லாகிரியால்
கொண்டானடிப்பாரோ குரவை நன்றாய்ப்படிப்பாரோ (நந்த)

பாரளந்தகோ பாலகிருஷ்ணன் றுதி
பாடுந்திருவடி பணிவேனோ
பரகதியடைவேனோ பூமியில் மறுபடி வருவேனோ (நந்த)

வசனம்.

நந்தனார் ஆதனூரை விட்டு கொள்ளிடத் தருகில் வரும்போது சொல்லுகிறது.

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-அடதாளம்

பல்லவி.

கொள்ளிடக்கரைபோனான்-நந்தன்
கோபுரங்களைக்கண்டான்

அநுபல்லவி.

பள்ளச்சாதியிலும் பறைச்சாதிநானென்று
உள்ளமுருகியவர் வெள்ளைக்கரைபுரள (கொள்)

சரணங்கள்.

ஓடத்தின்மேலேறி - நந்தன்
ஓங்குமகிழ்ச்சிமீறி
நாடயெவரும்நல்ல நடனக்கூத்தாடி
நணியுடன்கதிபெற லாமென்றுதிகொண்டு (கொள்)

அக்கரைபோனானே — நந்தன்
ஆனந்தங்கொண்டானே
சிக்கெனவேசிவ சிதம்பரேசனைக்கான
சிந்தைமகிழ்ந்துசிவ தியானஞ்செய்துக்கொண்டு (கொள்)

திருவாதிரைத்திருநாள்-செய்யுந்
தினமங்கலவைபவிந்நாள்
திருநடராஜமூர்த்தி திருமுகத்தினைக்காண
சித்தங்களிப்பேறு மென்றுறுதிகொண்டு (கொள்)

வசனம்.

இந்தப்பிரகாரந் தோத்திரஞ்செய்து கொள்ளிடக்கரைதாண்டி வரும்போது தில்லைக்கோபுரத்தைக்கண்டு தெரிசனம்பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-நண்டகம்-ஆதிதாளம்

பல்லவி.

கோபுரதரிசனமே-எங்கள்-பாபவிமோசனமே
தாபங்கள்மூன்றுந் தணித்துவிடுமல்ல
கோபமுண்டாஞ் சோதிவிளங்கிய (கோபுர)
விண்ணளைக்குமே லோங்கியேகண்டு
கண்டவர்க்கெல்லாக் காட்சியளித்திடும் (கோபுர)
அல்லும்பகலு மமரர்துதித்திடும்
தில்லைப்பிறையோன் றிருமுடிமிதித்திடும் (கோபுர)

வசனம்.

தில்லைத்தல மிப்படி யிருக்குமென்று

கீர்த்தனம்-இ-ம்-நவரோஜ்-ஆதிதாளம்

பல்லவி.

மாங்குயில்கூவியசோலைகளும் வாவிகூபதடாகங்களுந்
ஆங்கதிர்மண்டலமெத்தையுஞ் சொர்ணசபேசன் றுசமரமும்
நாலுபுறத்திலுங்கோபுரமும் நவமணிச்சித்திரமண்டபமும்
சிலமுழுத்திருவீதிகளுந் தில்லைவேதியர்மாளிகையும்
கண்டேன் களித்தேன் என்கவலையெல்லாமொழிந்தேன்
மண்டலம்புகழுஞ்சபேசன்சந்நிதி வாழ்த்திப்பணிந்துநின்றேன்
தஞ்சமென்றடைந்தேனிந்தச் சடலத்தால்நொந்தேன்
அஞ்சவேண்டாமென் றொருகாஞ்சொல்லி யழைத்தாலாகாதோ
அப்பாவுன்சரணம்தில்லைக் கரசேயுன்சரணம்.
ஒப்பாரில்லாநாடகம்பயிலு மொளியேநின்சரணம்

வசனம்.

கோபுரதரிசனமே என்கிற கீர்த்தன முதற்கொண்டு சிதம்பர விசாரமென்று பெயர்.

சிந்து.

சிவன் சேவடிக்கை தானென்று நாடிக்கொண்டே அரியாதது போலிருந்த செம்பொன் னம்பலத்தாடியைக் கும்பிடவே ஆதனூர் தனிலிருந்துவிடும் அம்புபோலப்புறத் தையரின்றித் தில்லையருகில் வந்தார் மனந் தெளிந்துகொண்டார்துறை யறிந்துகொண்டார் கெண் டாமணியோசை,

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

நாளைப்போவேனென்றார்கள் சொலற்கரியாது
பூளைப்பூவாம்பிறவிப்பிணிப் பொழியப்போவாராய்ப்
பாளைப்பூங்கமுகுத்தபழம் பதியினின்றுபோய்
வாளைப்போத்தெழும்பழனஞ்சூழ் தில்லை மருங்கணைந்தார்.

இதுபொழிப்புரை.

வசனம்.

நாளைப்போவேனென்றுசொல்லி அநேகநாள்கழியச் சபாநாதரைத் தரிசனம்பண்ணவேண்டுமென்னும் ஆசையை அடக்கக்கூடாதவராய் பூளைப்பூவையொத்த நிலைமையையுடைய பிறப்புகளால் உண்டாகிய சம்பந்தம் நீங்கும்பொருட்டு போகின்றவராய், பாளையையுடைய பொலிவாகிய கமுகமரங்கள் சூழ்ந்திருக்கும் பழமையுற்ற தம்முடைய ஊரில்நின்றும் புறப்பட்ட அன் வாளைமீனானது எழும்பிவிளையாடும் வயல்களையுடைய சிதம்பரத்தின்எல்லையையடைந்தார்,

கீர்த்தனம்-இ-ம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

கெண்டாமணியாடுது சண்டபிணிவாடுது

முத்திமணிதேடுது	நாடுதுகூடுது	(கெண்டா)
பரவசமாகுது	பாவங்கள்போகுது	(கெண்டா)
ஜெனனமாறுதிகள்	மோசமுதிர்ந்து	(கெண்டா)

சிந்து.

கெண்டாமணியோசை காதில்கேட்குதென்று நாதனைப் பார்க்கவென்றே கொண்டாட்டமாகிவந்தார் கையைக் குவித்தேனென்றுமக் கும்பிட்டதேனென்றே மனமகிழ்ந்தார் தெருவீதியிலேவந்துகாதலுடன் கண்டார்களையாறி இருகண்களிலானந்தம் பொங்கிடவே நின்றார் மதிற்புறத்தே வெகுநேர்த்தியென்றாரிதைப் பார்த்துதில்லை பணிந்தார் பரவசமாய் நல்லபாக்கியசாலிகளாகுமென்றார் இதுநானே தில்லைப்பதி.

வசனம்.

நந்தனார் தில்லையைக்கண்டு ஆனந்தாநுபூதியைச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்

பல்லவி.

தில்லைத்தலத்தைக்கண்டார் அதிசித்திவிலாசமென்றார்-அந்த
எல்லையிலேநின்றார் மனதிருக்கமாகக்கொண்டார்
இருகண்கள் நீர்வடித்தார் கொடுங்காமமல்லையறுத்தார்
இருகையைத்தூக்கிக்குவித்தார் தன்காலைக்கோணிக்குதித்தார்-இந்த
பிறப்பென்பதைமறந்தார் பரமானந்தக்கடலுறைந்தார்
தனதேகபாவமறந்தார் தில்லைச் சிவனேயென்றிருந்தார்

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

இதுதானோ தில்லைத்தலம்-இத்தனைநாளுமறியேன்
இதுதானோ தில்லைத்தலம் (இது)

அதுவேவாயிலோவென்று அலைந்திடும்பேயனைக்
கதிதருவேனென்று கைகாட்டியழைக்குது (இது)

காசியிலிறந்தால் கதியென்றெல்லோரும்
பேசக்கேட்டதேயுண்டு பேணிப்பார்த்தறிகிலேன் (இது)

வசனம்.

நந்தனார் தில்லையைக்கண்டு கொண்டாடுவார்.

கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான் காபி-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைதில்லையென்றால் பிறவி இல்லைஇல்லையென்று மறைமொழியும்
சொல்லைசொல்லை யென்றகொடுவினை
வல்லைவல்லையென் றகலுந்திருத் (தில்லை)

கற்றோருங்கற்றோருங் களங்கமறுத்திட
பெற்றோரும்பெற்றோரும் பேசாப்பெருமையி
லுற்றோருமுற்றோரும் பொன்னம்பலத்தில்
தத்தோந்தத்தோ மென்றுநடனமிடும் (தில்லை)

வாடிவாடிமா லயனீசருக்கும்
கூடிக்கூடிக்கொண் டல்லும்பகலும்
தேடித்தேடித் திருவடிமுடிகளைப்
பாடிப்பாடிக்கோ பாலகிருஷ்ணன்தொழுந் (தில்லை)

ஆலண்டா-இ-ம்-தேசிகதோடி—ஆதிதாளம்

பல்லவி.

இதுவோதில்லைச் சிதம்பரக்ஷேத்திர — மீசனிருப்பிடமோ
மதுரம்பொருந்திடும் — மறையோரிருப்பிடம்
மாமுனிவர்தவம் — வாழும்பெரியிடம்
பக்திபெருந்தொண்டர் — பணிந்துவருமிடம்
பரதெய்வமுமல்லில் — பாதியினுறுமிடம்(இது)

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

ஆடுஞ்சிதம்பரமோ ஐயன்கூத் தாடுஞ்சிதம்பரமோ
ஆடுஞ்சிதம்பர மன்பர்களிக்கவே
நாடுஞ்சிதம்பரம் நமச்சிவாயப்பொருள் (ஆடுஞ்)
ஆருமறியாமல் அம்பலவாணர்
சீரடியார்பார்க்கச் சேவடிதூக்கியே (ஆடுஞ்)
பாலகிருஷ்ணன்போற்றும் பானுமதிச்சடையினார்
தாளமத்தளம்போட தாதெய்தாதெய்யென்று (ஆடுஞ்)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தில்லையைக்கண்டபோதே தெளிந்ததென்னுள்ளமெல்லாம்
பல்லூழிகாலஞ்செய்த பாழ்வினைதொலைந்துபோச்சு
நல்லருள்நடனங்கார்க்கும் நாயகனார்சிற்சபைக்கு
சொல்லுவார்மகிமைசெப்ப சேடனுலாகாதென்று.

வசனம்.

இப்படியே தில்லையைக் கொண்டாடி தில்லையைப் பாராதவரே பாவியென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-சவாயி-சாபுதாளம்.

பல்லவி.

மார்கழிமாதத்திருவாதிரைநாளையில் வந்துசிதம்பரதேசிகனை
பாராதபாவிகட்கேதுமில்லையிந்தப் பாரில்வந்துபிறவாதவரோ
வானிற்செறுடுந்திருமாளிகைமண்டப மாவதிலுந்தில்லைமாநகரம்
காணக்கிடைக்காதஇந்தபாக்கியங் காதில்கேட்டவன்னாக்கண்டது
ஆதிபராபரமாகியதில்லைப்பொன் னம்பலவாணர்சந்நிதியில்
நாதமுங்கீதமுங்கேட்குது வாவந்து நாடகமேவனைநாவலர்க்கேன்

வசனம்.

நந்தனார் சிதம்பரங் காணாததனால் சிவலோகங் காணாரென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

சிதம்பரம்வந்து திரிசியாத ஜென்மம்வீணென்றுபேசு
மனதிலெண்ணினார் பாதகமலத் தியானம்பண்ணினார்
பறையனுக்கிருந்த தலத்தைப்பார்த்தபின்பு மோக்ஷபதவி
பலித்ததல்லவோ பாவிஜென்ம மறுத்ததல்லவோ
தொண்டுகொண்டதங்க ளையர்பெருமையெல்லாஞ்சொல்லிச்சொல்லி
துள்ளிக்கூவினார் ஞானவிதையை யள்ளித்தூவினார்
பூதலந்தனிலி திதுவேதெய்வமென்று நந்தனானந்தக்கடல்
பொங்கிப்பாடினார் புண்ணியத்தல மென்றுதேடினார்

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

அரகரசங்கரவென்னாவம்பலத்தானை
நாளுந்தினை க்கவென்று
உருகித்துதியாரோ-வானந்தம்
பெருகிப்பதியாரோ

முத்தியளிக்குந்திருமூலத்தானனைக்கண்டு
பத்திபண்ணாதவன் பாமரனல்லவோ
பாருக்குச்சுமையாச்சு-அவனிருந்து
யாருக்குச்சுகமாச்சு

மங்கையர்மோகமாய்மயங்கித்திரிந்தோரு
மங்களபுங்கவனாமவரின்மேல்
கொண்டாடிக்கிளைத்தாரோ-அன்னியமாய்
நாளையுங்கழித்தாரோ

விசனடைகடக்கமெய்யும்பொய்யாகவே
ஓசையடங்கும்போதொருவருமங்கில்லை
தாசியும்போகாதே-காதலுற்ற
வாசியும்வாராதே

சிவசிதம்பரமென்றுதில்லைவெளியினின்று
பவசாகரமென்னுபரமபதமடையுந்
தவநெறிபொருந்தாரோ-பொருந்திய
வவனையும்வருந்தாரோ

சாத்திரங்கற்றுஞ் சதுர்மறையுணர்ந்தாலும்
ருத்திரஞ்செபித்தாலுஞ் சொல் [illegible]

மாத்திரம்போகாதே-கருவைக்குப்
பாத்திரமாகாதே

சாருகதியென்று சார்ந்தடியவரிடம்
வருணாச்சிரமவிதி வழுவாதிருக்குஞ்
ஜனனாதிகள்விடுமோ-சாவனை
மனனாதிகள்படுமோ

அஷ்டசித்திகள்பெற்று ஆண்டாயிரங்காலம்
மட்டிருந்தாலுமென்ன மரணபயமெய்திலா
நஷ்டஜென்மமாச்சே-மனிதஜென்ம
மெட்டிவிணாய்ப்போச்சே

முப்பாழுந்தாண்டி மூலத்திமூட்டிக்கொண்
டப்பாலேநின்றா னந்தங்காணலா
மொப்பாரில்லையடா-வுடுருகி
நிற்பாரில்லையடா

ஆலமிடறடக்கி யம்பலக்கூத்தன்றோ
பாலகிருஷ்ணன்தொழும் பரசிவமேயென்று
பாடிப்படியாரோ-பருவத்தில்
தேடிப்பிடியாரோ

வசனம்.

நந்தனார் சிவபக்தி பண்ணாதவனை நிந்தனைசெய்து இன்னமுஞ் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-சாப்புதாளம்.

வானோர்புகழுந்தில்லை வனநாதர்வாழுஞ்
ஞானசபையைப்போற்றி நமச்சிவாயமென்று
சொல்லாதவன் கல்வி கல்லாதவன் வெகு பொல்லாதவன்

காசினிபுகழ்சிவ காமிவல்லியைக்கண்டு
பாசமகலும்நெறி பாராதவன்சுத்தப்
பதராச்சு ஆட்டினதராச்சு கிருமிக் கெதிராச்சு

ஆட்டுக்காலைச்சற்றே கேட்டுவாங்கியுள்ள
நாட்டிக்கொள்ளாதவன் மாட்டுக்குளம்பையென்று
நாடாரோ கண்டு கூடாரோ என்றுந் தேடாரோ

அம்பலவாணரு கருகில்வந்தமையால்
கும்பிட்டுறைஞ்சாத குருடர்களுக்குத்திரு
மதியேது பர கதியேது பண்ணும் விதியேது

நாக்கிருந்துஞ்சிவ நாமத்தைத்தனிலாமல்
சாக்குப்போக்குப்பேசுஞ் சண்டியவனாக்கால
வடியாமோ கட்டிப் பிடியாமோ கையா லடியாமோ

வேதாகமநூற்களை விரித்துணர்ந்தாலு
மேகாந்தபக்தியொன் றில்லாதவனுள்ள
முருகாது கள்ளம் கருகாது வெள்ளம் பெருகாது

ஆத்திமதியுஞ்சடை யழகனடியதைப்
பார்த்துகளிக்காத பாவிமனிதர்க்கொன்றும்
பலியாது வினை சலியாது சிவம் பொலியாது

பாலனிருந்தனன்றேடும் பாதாரத்தைக்கண்டு
மேலுமுடனேயுண்டு செபிக்காதவன் துன்பம்
அலையாது வின்பம் நிலையாது கன்மம் கலையாது

வசனம்.

சிதம்பரம் பாராத கண் படைத்தாரை முகத்தைக் கெடுக்கவந்த புண் படைத்தாரென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தக்களிப்பிமேல-ஒருபேதம்.

காணாதகண்ணென்ன கண்ணோ
விணாகண்மயிர்க்கண்ணாத புண்ணோ (காணா)
சொல்லும்பொருளிறந்த துரியவடிவதாகி
யல்லும்பகலுமற்ற வானந்தப்பேரொளி (காணா)
பதியாமநுந்தனிக்கும் பரமாகசியத்தி
லசையாமலேயாடு மம்பலநாதனைக் (காணா)
வைராருடியாம லொளிகண்டுபிசகாமல்
கூராருக்காத்துகொண்டு எழும்பியமண்டபம் (காணா)
அண்டத்துளடங்காத வாசைவலையைப்பூட்டி
பிண்டத்துளடங்கிய பேரின்பதெப்பத்தைக் (காணா)
நாசிநுனியிருந்து நாதனோதானென்று
பேசாமற்றனிற்கும் பெருமையையொருநாளும் (காணா)
எல்லையானதிபேயனை நிகழ்ந்திடும்பேயனைத்
கன்னத்திகாரியனுக்கித் திருச்சிற்றம்பலத்தானைச் (காணா)

சொற்றத்தாருக்கிரிமைக் கடைக்குநிறுவென்ன
    ஆத்திமகிழுந்தடை யழகனைமருங்கோயில் (காலு)
மிலக்கமலமுகச் சிவகாமிமனமகிழ்
    கோலக்கனகன்றில்லைக் குமுகனுடியகூத்தைக் (காலு)
பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைப்பணிந்தொரு
    காலும்மறவாதநலமிங்கவழிதேடி. (காலு)

வசனம்.

பத்தி பண்ணுதவன் முத்திபெறுவென்று சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்

வேதம்படிக்கும் சாஸ்திரங்கற்றும் மெய்யிளில்நீறுபூசவூறும்
ஆதிசிதம்பர நேசிகன்திருவடிக் காளானல்லானந்தம்
உடனேதுலேயும் பாவபந்தஞ் சொன்னேன்சொன்னேன்சொன்னேன்

ஊனுறக்கமுத லாகியநான்கு முண்டேயுலகில்யாவருக்கும்
ஆணவமலநீத்தார்களறிவா சகத்தைச்சுருதிக்கொள்ளுவாரோ
ஜகத்தைப்பொய்யாகதள்ளுவாரோ சொன்னேன்சொன்னேன்

அருந்தவமுனியாகிலும்நல்ல ராசைபொல்லாதறியாரோ
வருத்தப்படுத்திமனதைமயங்கி வைத்திடுமன்னமயங்கோசம்
உற்றுப்பார்த்தாலறிநேசம் சொன்னேன்சொன்னேன்

அரவணைகோபாலகிருஷ்ண னல்லும்பகலும்பணிந்தேற்றும்
திருவடிசரணாகதமென்றெண்ணித் தெளிந்தார்களன்றோபாபத்தி
ஒழிந்தாராக்கன்றோவரமுத்தி சொன்னேன்சொன்னேன்

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இப்பரிசாயிருக்கவெனக் கெய்தவரிதென்றஞ்சி
யப்பதியின்மதில்ப்புறத்தி னாருதபெருங்காத
லொப்பரிதாம்வளர்ந்தோங்க வுள்ளுருக்கிக்கைதொழுது
செப்பரியதிருவெல்லை வலங்கொண்டுசொல்லுகிறார்.

வசனம்.

இந்தப் பிராமணர்களுடைய வீடுகள் இந்தன்மையாயிருக்க, எ
னக்கு அவ்விடத்திற்றுப் போகுதலரிதென்று பயந்து அந்த ...

தின் மகிமையைப்பற்றி அளவற்ற பேரன்பு சமானமில்லாமல் வளர மனமுருகிக் கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லையை வலஞ் செய்துகொண்டு போவார்.

விருத்தம்.

அம்மையப்பர் தில்லைமாநகர் மருங்கிடையணிந்து
கம்மையிட்டிவிழிகளில் நீர்ச்சொரிந்து
விம்மியெயிலவனார் எதிர்க்கைவிரித்துக்
கொம்மையிட்டவர் பாடியுமானந்தங்கொண்டார்.

வசனம்.

நந்தனார் தனக்கிப்பாக்கியங் கிடைத்ததென்று கொண்டாடுகிறார்.

கீர்த்தனம்-௩-ம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

கொண்டாடுகிறார்தில்லைக்கோயிலைக்கண்டுதாவித்தாவி (கொ)
அண்டரண்டக்கொழு மம்பலநாதனைக்
கண்டானைக்கண்டுகொண் டோமென்றுநன்றாய் (கொ)
அஞ்சலிகொண்டுகுதித்து அரகரவென்றுஜெபித்து
குஞ்சிதபாதத்தைத்துதித்துக் குரவைகள்பாடிக்குதித்து (கொ)
அங்கம்பரவசமடைந்து ஆனந்தக்கடலெழுந்து
பொங்கிப்ரியமென்றறிந்து புவியதிர்ந்துபணிமிருந்து (கொ)
இருகண்ணில்நீர்பெருக இறைஞ்சிமனதுருக
அருமைச்சிவன்கதிதருக அம்பலவாணன்வருக (கொ)

இதுவுமது.

தரு-௪-ம்-சௌராஷ்டிரம்—ஆதிதாளம்

பல்லவி.

கொண்டாடினாரே நந்தனார்-கோயிலைக்கண்டு
கொண்டாடினாரே நந்தனார்

அநுபல்லவி.

அண்டர்மகிழ்ச்சியாலே அரனேயென்றுமென்மேலுங்(கொ)

சரணங்கள்.

பண்டுநான்செய்ததே யோகம்-அதனாலுருக்
கொண்டுவந்தேன்மானிட தேகம்-ஆச்சேயிந்தப்
புண்டரிகப்பதுவை போகம்-கண்டேனென்போல
பண்ணினிலவர்க்குளதிப் போகம்-என்றுதுதித்துக்

கொண்டாடிமிகப் புகழுங்
கூறவந்திடுமோ — சாகம் (கொ)

வஞ்சனைக்கொரு — மிக்கு-நினைக்கொதாரத
பஞ்சபாதகப்பேர் — கெடுக்கு-வழுக்கர்களைக்
கெஞ்சியவர்களை — படுக்கு-வுபலாயமலை
கஞ்சமலர்ப்பாதன் — கொடுக்கு-ஆண்டருமெய்ய
வஞ்சிசிவகாமிதொழும்
மணவாளனைத் — துதிக்குக் (கொ)

ஒருநாட்புறமதிற் — ஜொலிக்க-ஸ்வர்ணகோபுரத்
வருவார்திரும்புவார் — களிக்க-பிரசின்பேலே
இருகைகுவித்துவாள் — ஒளிக்க-சபேசனைத்
திருநாளைப்போவார் — விளக்க-வாசையாலிந்த
பேதமில்லையே — புரைக்கக் (கொ)

வசனம்.

இப்படி வீதியைச்சுற்றி சந்நிதியில்வந்து அடி விழுந்தார்போல் உடல்படியப் பணிந்து புழுதிபடப்புரண்டு ஆனந்தமடைந்து தீர்த்த சபை தெரிந்து தெரிசனம் பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

சபாதெரிசனங்கண்டான்நந்தனுஞ் சுபாவமுடனேநின்றான்
சபாதெரிசனங்கண்டான்களித பிரபாவமாகியசபாபதியிருக்கும்
சதாகாலமும்வேதங்கள்மொழிந்திடுஞ் சிவாகாசமாய்செழித்துவளர்ந்
தில்லைமூவாயிரமுனிவர்கள்கூடி பல்லும்பகலுமரைவர்நாடும் [திடும்

வசனம்.

தெற்குவீதியினின்று சபாபதியைத் துதிபண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெயஜெயதீசா அதிசுந்தராஞ்சிதபாதா ஜெயஜெயதீசா

தில்லையைக்கண்டேன் தேறித்தெளிந்தேன்
எல்லையில்நின்றேனினிப்பிறவேன்காண்

எனக்கினியாரிடு கரும்புபோலினிக்குதுபார்விடு
ஆராபாரத் தைவேற வெட்டமானந்தத்தின்முழுக்காட்டி
வைக்குதியாருக்குங்கிடையாது இந்தசுகம்பாருங்குளிலையே
சரணாகதமென்றிங்கேவந்தேன் சாமிபாக்கு [து
உடைபடைந்தேன் ஜெனனநீக்களான் மிகநொந்தேன்
வேலெருருகேதப்பவங்களைவருந்தேன் (ஜெய)

தென்றிசைக்கோன்வந் தழைத்திடும்வேளையில்
பெண்பிள்ளைகள்குன்றேட்டம்
கட்டுத்திரைச்சியபெருங்கூட்டம்
நாளும்மனுத்தின்டாட்டம் ஒருநம்பிக்கைதாரும்
நாளுனக்கருள்புரிந் தானுமேவென்று
கனவிலாகிலும்வாருந் தட்டியெழுப்பிக்கவலைகள்தீரும்
அடிமைபொன்றுமனதுமகிழ்ந்துபாரும்
தில்லைவெளியில்வருவரோசேருமிடம் (ஜெய)

அரகராங்கரமேனபொன் னம்பலத்தாண்டவனே
பரமதயாமூர்த்தி யென்றடிபணிந்தேன் மனங்குளிர்ந்தேன்
ஜாதியில்சின்னவனானால்முன் விதியில்வந்தேனாகாதே
பாதகஞ்செய்யினுஞ் சிதம்பரமென்று
பகர்ந்தால்பழிவினை போகாதோ
நீதில்லாதபெருந் தவத்தோர்வந்தால்
தெரிசனைசெய்தேன் போகாதோ
ஆதிபராபரமாகியிவனைக்கொண் டாடுவேன்
பாடுவேன் தேடுவேன் நாடுவேன் (ஜெய)

அபசாரமாகியமுராரம் சதாவிஷயகாமாதிகோரம்
உபாயமதிந்துதாதாபேறப்படாததுஜெகதீசமாயா
விலாசகற்பிதமிந்தஜெகம் அனேகசஞ்சிதவாசனைகள்
சியவேலாகமென்கிறபாவனையால்நிவாசனம்பெரியோர்கள்
பண்ணியதொழிலிற்பயனறிவார் பாலகிஷ்ணன்தொழுங்கழலை
எண்ணியபடியேதவமுயுவார் எனதுனதென்னுமுறையிடுவார்
சமாதிபண்ணியகர்மாதிதிருந்தி யடாதேபேதகைவிடாதேயும்
சபாபதிவெகு விர்பாதிதியுன்
பிரதாபமறிவேன் சுபாவப்பறையன் (ஜெய)

விருத்தம்.

வாட்டுவாருடல்வேர்பட தழலிடைவருத்தி
மூட்டுவார்மூலக்கனல் மதிமண்டலமுகட்டில்
மாட்டிறைச்சியருந்திய புலையன்றன்மனத்து
ளாட்டுக்கால்சற்றே தந்திடுமம்பலத்தரசே.

கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான் காபி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதாதாயோடியபாதம் தத்தித்தெய் தத்தித்தெய்யென்றாடியபாதம்
ஆதரவாகபதஞ்சலிமாமுனிக் கானந்தநாடகமாடுந்திருவடி
ஆகமவேதபுராணங்களோதிய யோகிகளாலேதேடுந்திருவடி
சிந்தைமகிழ்ந்துகுனித்திடவேதிய சுந்தரரஞ்சிதகுஞ்சிதபாதம் (தா)-
பாரளந்திடுகோபாலகிஷ்ணன்துதிப் பாடிப்பாடிப்பணியும்பாதமே

வசனம்.

நந்தனார் பிறவிப் பிணிக் கஞ்சித் துதி பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

அம்பலவாணாவுன் சரண மடைந்தேனானேழை
ஆதரிக்காறவ துன்பார மல்லவோசொல்லவோ
எடுத்திடுஞ்ஜனனங் கணக்கெழுதத் தொலையாதென்பாடு
இன்னமும்பிறந் திடுவேனோநடேசனேயீசனே
ஆசையெனும்பெருங் காட்டிலேயாற்றமுழுமூடன்
அகலவிடாதேயும் நம்பினேனென் னையனேமெய்யனே
பாரளந்தகோ பாலகிருஷ்ணன் பணியுமலர்ப்பாதம்
பாவியென்னுள் ளூறவேகருணை பாருமேவாருமே

வசனம்.

அம்பலத்திலாடும் நடனத்தை வர்ணித்துச் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடியபாதா இருவர்கள் நாடும்விநோதா

அநுபல்லவி.

ஆடியபாதா வயனுமாலுந்தினம்
தேடியுங்காணுமற் றிரைமறைவாக
திக்திந்திக்தி திக்திக்திஎன (ஆடிய)

விரவிவண்டையஞ்சிலம்பலைந்திட மேவுஞ்சடையும் ஆடவே
சாருந்தொண்டர்கள்மனங்களித்திட சாமிளாதிபதவியுந்
தத்தோதக்கத்தோதக்கத்தோமென்று (ஆடிய)

வேதமுனிவர்கள்பாடவுஞ் ஜனகாதியோகிகள்
வெகுநாதமெய்ப்பூரிப்புமுடையுந் திருநந்திமத்தளம்போடவுந்
தருத்தருத்தருத்தருமென (ஆடிய)

பாலகிருஷ்ணன் துதிசெய்திடப் பண்ணவர்கள் பூமாரிபெய்திட
சிவமுன்னிவகாமியெழுந்திடத் திருச்சிற்றம்பலத்தரசனுந்
தாந்தாந்தாந்தாமென்று (ஆடிய)

வசனம்.

நந்தனார் அடிமைத்திறங் காட்டிச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்.

அறிந்தறியாமலே செய்தபாதக மையாவென்னை
ஆண்டருளென்றிந்தத் தொண்டர்கள்கடந்திடு பதாவுன்சரணம்
பக்தவத்ஸலாண்டவாராயா அடிமையுன்சரணம்
கதிமோக்ஷமுந்தருமென்றுமிலாதபிரமனேசரணம்
பொங்குமானந்தக் கடலேவெளியே யறிவின்னறிவேயுன்சரணம்
பஞ்சாக்ஷரத்திற்குளுறைபவனுஞ்சரணம்
உன்றின்மகிமைகண்டோரியாதவெளியேனுன்சரணம்
ஒன்றுக்குள்ளொன்றுபோலெங்குங்கண்ட பதார்த்தாவுன்சரணம்
பாதமேவேட்டுகண்டுமறியாதவன் கனகசபேசாவுன்சரணம்

வசனம்.

இப்படி யனேகவிதமாய் கொண்டாடி யுட்புகுந்து தாண்டவம் பாராதருளைக்கொண்டு சுவாமியை நான்உள்ளே வரலாமோவென்று கேட்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-மாஞ்சை-ரூபகதாளம்.

பல்லவி.

வருகலாமோவையா-உந்தனருகில்நின்று கொண்டாடவுநான்

அநுபல்லவி.

பரமகிருபாநிதியல்லவோ இந்தப் பறையனுபசாரஞ்சொல்லவோ
உந்தன்பரமானந்தத்தாண்டவம்பார்க்கவே நானங்கே (வருக)

பூமியிற்புலையனாகப் பிறந்தேனே—நான்
புண்ணியஞ்செய்யாம லிருந்தேனே
சாமியுன்சந்நிதி வந்தேனே—பவ
சாகரந்தையு மிறந்தேனே
கரை கடந்தேனே ராமனை மடைந்தேனே—இல்லை
வசதாப்பிரதாபமும் பாபமும்திரமேவ(வரு)

வசனம்.

இப்படித் திருநாளைப்போவாரென்னும் கீர்த்திபெற்ற நந்தனார் தில்லையில்வந்து கொண்டாடும் பக்திமார்க்கத்தை அதிசேஷனால் வர்ணித்துச் சொல்லப்படாத ஞானபக்தி வைராக்கியசாஸ்திரங்கள் சூடியிருக்கும் ஹரின்பேர் சொல்லக்கேட்டறியாத பேதையாகியகோபாலகிருஷ்ணனென்னும் பெயர் கொண்ட என்னால் சொல்லத்தருமான தோ உளறிக் கூறியதால் பெரியோர்கள் பிழை பொறுக்கக் கடமையென்றுசொல்லி வணங்குகின்றார்.

சிந்து.

இதுதானோ தில்லைப்பதி யென்று எக்களித்தா ராடிக் கொக்கலித்தார்-ஐயாவுன்சந்நிதியைக் காண ஆசைவைத்தேன் மிக நேசமுடன்-தெருவில்பொடித்தூளை அள்ளித் தேகமுழுதிலுந் தாகமுடன் - தரித்தார்திருநீறாய் நாலு சாஸ்திரவேதங்கள் பார்த்துணரும்-பெரியோரிருக்குமிடம்.

வசனம்.

நந்தனார் அந்தத் தில்லைத்தலம் இப்படி யிருக்குதென்று சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-செந்தகடுக்கா-ஆதிதாளம்.

தண்டகம்.

ஆகமங்கள்வேதியர்கள்சிவ னடியார்கள்கூட்டம்-நம
தேகமாகியப்போதுவிளைகின்ற யோகிமுனிகளோட்டம்-பூ
லோகநகைலாசமென்றதைப் போற்றுவார்களாட்டம்-அதி
வேகமாகவெங்கேயாகிலும் வெளியேபோகவேணுமையே
இங்கிருந்தலாகாதையே இங்கிருந்தலாசாமையோ
பாவிப்பறையனிங்கேவரலாமோ சுவாமிதரிசனந்தாலாமோ

பிசு—

பாதகமலங்களைத் தொடப்போமோ
பாவமெனைப்பிரிந்து தொலைபோமோ
இங்கேஆகாதாகா தையே
வெள்விசெய்யும்புகைமேலுலக மெழும்பிபோகுதையே
புண்ணியவான்கள்புரியுந்தவம்
ஆகாசிவனென்றுஆடிப்பாடிக்கொண்டு
பரிவுடனாசனைப் பிரதக்ஷணம்வருமிடம் ஆகாதாகாதையே
மலிபாடுதுவெருஜனங்கூடுதுவீதிவலமாகுது திருப்பதம்பாடுது
உள்ளொடமாடுது பணிவிடைபோகுது பரவசமாகுது
மெத்தபயமாகுது இங்கே ஆகாதாகாதையே
நீண்டாதேஇங்கேவேண்டாதேசும்மா இனையாதேஇங்கேதரியாதே
என்னைப்பாராதேபடிஎருதேஉள்ளே போகாதே வர லாகாதே
யென்பார் ஆகாதாகா தையே

சிந்து.

பெரியோரிருக்குமிடம் இந்தப் பேயனிருப்பதுளாயமல்ல - நான்றுபறைச்சாதி இல்லை நாதன்தெரிசின மாதரவாய்-பண்ணப்படுபாவி இந்தப் பாவிருப்பதுசரலவே-என்றேகுளத்தோரம் சுத்தி ஏங்கினின்றார்துயர் நீங்கிநின்றார்-ஐயாப்பெருங்கவலை கொண்டு உள்ளங்குழைந்திடவெள்ளமெனக்-கண்ணீர்சொரபரள இரு கைதொழுதாரவர் மெய்தொழுதார்-கீழேபுரண்டழுதார்.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செல்கின்றபோழ்தந்தத் திருவெல்லைபணிந்தெழுந்து
பல்குஞ்செந்நிவளர்க்கப் பயில்வேள்வியெழுபுகையு
மல்குபெருங்கிடையோதுங்கி மடங்களேருங்கினவங்கண்
டல்குந்தங்குலநினைந்தஞ்சி யிடைந்திவர்நின்றார்.

வசனம்.

திருநாளைப்போவார் சிதம்பரத்துக்குப்போனபொழுது அதின் எல்லையைக்கண்டு நமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச் சிவந்த அக்கினியைவளர்த்தி ஆகுதி செய்கின்ற யாகத்தால் உண்டாகிய புகையுமிகுந்த பிராமணப் பிள்ளைகளின் நான்குவேதங்களை ஓதும்படியாக அடிக்கடி நெருங்கியிருக்கும் மடங்களையுங் கண்டு குறைவாகிய தம்முடைய குலத்தை நினைத்து உள்ளேபோவதற்குப் பயந்து போகாமல் நின்றுவிட்டார்.

இதுவுமது-விருத்தம்.

நின்றவரங்கெய்தரிய பெருமைதனைநினைப்பார்முன்
சென்றவையுக்கடந்தூர்சூழ் மெயிறிருவாயிலைப்புக்கார்
குன்றனையமாளிகைக ளொருங்குலவும்வேதிகைக
ளொன்றியமூவாயிரமங் குளவென்பாராகுதிகள்.

வசனம்.

எல்லையில் நின்றுகொண்டிருந்த திருநாளைப்போவார் தான் உள்ளேயடையக்கூடாத அக்கோயிலின் பெருமை நினைப்பாராகி முதலில் அந்த எல்லையைக்கடந்து ஊரைச் சுற்றி யிருக்கும் மதிலின் திருவாசலையடைந்தார் அங்கே திண்ணைகள் பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் விடுகள்தோறும் ஓமங்கள் செய்யப்படுகின்றதென்று சொல்லிக்கொள்ளுவார் சுவாமியைப் பூசிக்கிறதில்லை மூவாயிரவர்களுடைய விடுகள் மாளிகைகள் மூவாயிரமென்றூர் வேதவிதிப்படியாகுதிசெய்யும் பிராமணர்களுடைய வீதியிலே தாம் போகக்கூடாதபடியால் அதைநினைந்து தங்குலத்தை இகழ்ந்து இருக்கலாகாதென்று அவ்விடம்விட்டு ஒரு குளத்தருகில்வந்து சுவாமியைப் பாராத ஜென்மம் என் படைத்தேனென்று தாழப் புரண்டழுவார்.

கீர்த்தனம்-இ-ம்சரசாங்கி--ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச்சடலம்வந்தவா றேதென்றறிகிலேன் நானேதென்றறிகிலேன்

அநுபல்லவி.

சந்ததமும்தில்லை யம்பலத்தானை
சிந்தித்துமாயச் சிறுக்கறுக்காமல் (இந்தச்)

சரணங்கள்.

அங்கமலங்களைப் போக்கியேசிவ
கங்கையிலாடிக் களங்கமறாமல் (இந்தச்)

ஆடும்நடனங்கண் டானந்தமாகிப்
பாடிப்படித்துப் பணிந்துகொள்ளாமல் (இந்தச்)

அஞ்சக்கரத்தை யெடுத்துருவேற்றி
வஞ்சப்பிறவி மயக்கறுக்காமல் (இந்தச்)

பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைக்கும்பிட்டு
சீலமுள்ளமுத்தி சித்திபெறாமல் (இந்தச்)

கீர்த்தனம்-இம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கனகசபாபதி தரிசனம்ஒருநாள் கண்டால்கலிதீரும்

அநுபல்லவி.

ஜனகசனகமுனி வந்தனைகொண்டேத்திய தினகரகோடிதேஜோன்மயமாகிய

சரணங்கள்.

மனதிலொருதரமெண்ணிய கல்மிஷம்போக்கும்
மாயப்பிறப்பறுத்து மறுவடிவாக்கும்
ஜனனமரணசமு சாரத்தைநீக்கும்
திருவடிநிழலிலே கூட்டியேகார்க்கும்(கன)
சுருதிமுடிவுகளில் சொல்லிக்கொண்டாடும்
அம்பலவெளியையொளி யாகவேகூடும்
குருமலிதரியுந்தவ ருதுளநாடும்
தகிங்கணத்தோமென்று தாண்டவமாடும்(கன)
பற்பலயோசனை செய்வதுந்தொல்லை
பாக்கியமடையவு பாயமுமில்லை
அற்புதமாகவே நாமொருசொல்லை
அறியுங்கோபால கிருஷ்ணன்பணியுந்தில்லை(கன)

கீர்த்தனம்-இம்-கரகரப்பிரியை-சாப்புதாளம்.

பல்லவி.

கட்டைகடைத்தேறவேணுமே சனகசபாபதிநடனங்
கண்டுகளிக்கவந்த இந்தநந்தனார் (கட்டை)
கட்டைகடைத்தேற வொட்டுமோஜென்மம்
கெட்டகல்லவோ இஷ்டமறியேன் (கட்டை)
முத்தியளிக்கும் பத்தியிலென்ன
சிற்றம்பலவன் சித்தமறியேன் (கட்டை)

வசனம்.

தேகம்படைத்தால் சிவபத்தி பண்ணவேணுமென்று நந்தனார் சொல்லுவார்.

கீர்த்தனம்-இம்-தெண்டகம்-ரூபகதாளம்

பல்லவி.

தேகம்வந்தவாறு சொல்லவோ-சிதம்பரேசனடியைத்
தினமுந்தொழுதிருப்பதற் கல்லவோ
இந்தவிஷயசுகத்தை நாடுமே-பாவிமனக்குரங்
கிருப்பிடங்காணும லோடுமோ
தில்லைத்தலத்தைக்கண்டு மாச்சுதே-உள்ளேசென்றுநடன
தெரிசனம்பண்ணாமல் போச்சுதே

பறையனென்றஜென்மம் போகுமோ-பாழ்நிலையாகியின்னம்
பாரில்வந்தாபிறக்க லாகுமோ
அடிமையென்றுவந்தே னுய்யுமோ-ஒன்றையுந்நானறியே
னம்பலத்தெய்வமென்ன செய்யுமோ
பார்த்தெல்லாமறிந்தா னோறுமோ-கோபாலகிருஷ்ணன்
பணியும்பரமசிவன்கருணை வேறுமோ

வசனம்.

சிதம்பரதெரிசனங் கண்டபேர்க்கு ஜென்மம் இல்லையென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-ரூபகதாளம்.

பல்லவி.

தெரிசனங்கண்டவர்க்கு மறுஜென்ம மில்லை
வரிசையுடனம்பலவன் வாழ்கின்ற தில்லை(தெரி)

சரணங்கள்.

இரவுபகலிடைவிடாதேகாச பத்தி
இன்பமுறுமானந்தம்பொங்கும் ரத்தி
பரவிவருமானருளாலணிமாதி சித்தி
பணிந்துவந்துசிற்றம் பலத்தைவலம் சுத்தி(தெரி)

சொர்ப்பமென்றிவ்வுலகம் தோன்றிவரும் வேதம்
சொன்னததுநின்படியாகும் போதம்
அற்புதமிர்தங்கமொடு தாளவகை கீதம்
அனவரதத்திருநடன மாடிவரும் பாதம்(தெரி)

அல்லும்பகலோயாது அடியார்கள் கோஷ்டி
அரகராவென்றமிர்த பானமதைக் கூட்டி
தில்லைவாழந்தணர்கள் கைபிடித்துக் காட்டி
சிக்கெனவேதிரைதிறந்து ப்ரவெளியைக் காட்டி(தெரி)

நஞ்சுண்டகண்டனுக்குக் கொன்றைமலர் சாற்றி
நல்லதிருச்சாந்தணி அம்பிகையைப் போற்றி
குஞ்சிதவத்தந்தமது மனதிலுற வேற்றுக்
கோபாலகிருஷ்ணன்தொழும் நடராஜ மூர்த்தி(தெரி)

வசனம்.

தனக்கு தெரிசனங்கொடுக்க அம்பலவாணர் எப்போதுவருவா ரோவென்று விசாரப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி.

பல்லவி.

எப்போவருவாரோ எந்தன்கலிதீர எப்போவருவாரோ

எப்போவருவாரோ எந்தன்கலிதீரச்
செப்பியதில்லை சிதம்பரதேவர் (எப்போ)
நற்பருவம்வந்து நாதனைத்தேடும்
கற்பனைகள்முற்றக் காட்டிருக்காள (எப்போ)
அற்பசுகவாழ்வி லானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைக்காணேன் பொன்னம்பலவாணன் (எப்போ)

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

வருவாரோ அருள் புரிவாரோ எந்தன்
மனதுசலிக்குது நானென்னசெய்வேன்
அரகரசங்கர வம்பலவாணனை
ஆதரிக்காதிருப்பாரோ ஒருக்கால் (வரு)

வசனம்.

நான் சின்னசாதியானதால் வருவாரோ வாராரோவென்றுஞ் சஞ்சலப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி—ஆதிதாளம்

பல்லவி.

வாராமலிருப்பாரோ ஒருக்கால் வருவாரோவடியேன்

பாராமலிருப்பாரோ பதஞ்சலிமுனிக்குப்
பாதங்கொடுத்த ஈசனென்று (வாராம)
கனவில்வந்து கழலிமுழுதும்நட்டு
மனதுமகிழ்ந்துடன்னை வாவென்றுசொன்னவர் (வாரா)
களங்கமறவேஅவர் காலுக்குக்கும்பிட்டு
குளத்தங்கரையில்நின்று கூப்பிடும்வேளையில் (வாரா)
அல்லலறுத்துப்பர மானந்தமேதரும்
தில்லைத்தலத்தைக்கண்டு தெரிசனம்பண்ணியும் (வாரா)

வசனம்.

இதுவரையில் வாராதபடியினால் இனிமேல் தில்லைத்தலத்தைவிடாமல் சுற்றிவந்து தேகத்தைத் தள்ளுவோமென்று நிச்சயம்பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காணேனே என்னசெய்குவேனவர் (இன்)

இன்னம்வரக்காணேனே தில்லை பொன்னம்பலவாணன் பண்ணையும்
நட்டென்னையுமிங்கேவாவென்று சொன்னவர்மறந்தாரோ (இன்)

சொல்லும்பொருளுமிந்தச் சோதியேபகிழ்ந்துவாழும்
தில்லையைவிடாபற்சுற்றித் தேகத்தைமாற்றிக்கொள்வதுநல்லது(இ)

பாலகிருஷ்ணன்போற்றும் பாதச்சிலம்புகுலுங்கக் கோலமுடனடனங்கண்டேன் குறைகள்தீர்ந்ததென்றுசொல்லவுந்தான் (இன்)

வசனம்.

இப்படிச் சொல்லிக்கொண்டு கண்ணீர்சொரிந்து புரண்டழுவார்.

சிந்து.

கீழேபுரண்டழுவார் என்றுங் கேள்விமுறையில்லையோநாதா
வென்றேதலைகுனிந்தார் எந்தன் வேதனையைக்கண்டாதரிக்கும்
தெய்வங்கிடையாதோ பாவி சித்தந்தெளியவிர்த்திதந்து
வாவென்றழையாதோ விண்ணில் வானவர்கள்போற்றுமுனமிலாக்
கனகசபைநடனங் கண்டு காயங்களித்திடநாயடியேன்
வருந்தித்துதியேனே எந்தன் வாணாளுருகுதீனையோயே
அட்டா இதென்னஜென்மம்.

வசனம்.

இப்படி புரண்டழுது தான் படுகிற துன்பத்தைக்கண்டு ஆதரிக்கும்படியான தெய்வம் எங்குங் கிடையாதோவென்றும் இருந்தால் வந்து என்னை யாதரிக்காதாவென்றும் என் மனது குளிர ஒருவார்த்தை சொல்லாதாவென்றும் மேலாகிய தேவர்கள் போற்றும்படியானவனே என்னுடைய தோத்திரத்துக்கிரங்கி வரக்கூடாதாவென்றும் உனது நடனசபைக்கு என்னை யழைத்துப்போய்க் காட்டி என்னுடைய இழிவான குலத்தை மாற்றக்கூடாதோவென்றும் இப்படிப் பற்பலவாறாகப் பணிந்து துன்பசாகரத்தி லாழ்ந்தார்.

விருத்தம்.

சாதிபேதமுஞ் சூனைக்குடியா [illegible]
ஆதிபாதியுந் [illegible]

மாதவம்புரி தொண்டர்கள்பணிதிரன் மறைக்க
கோதிலாவருக் கொண்டுமிப்பிறவிக்குக் குறையோ.

வசனம்.

இப்படிச் சாறுநாதமென்று உன்னை நம்பிவந்து துன்பப்படலா மா சிவனே சிவனே யென்று பெருங்குரலிட்டு தனக்குச் சென்மம் போதும் போதுமென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை

பல்லவி.

போதும்போதுமையா-எடுத்தஜென்மம்-போதும்போதுமையா

அநுபல்லவி.

மாதவமானவர்கள்புகழுந்தில்லை
வனத்திலனுதினமும் வளரும்பலவாணு (போ)

சரணங்கள்.

கோத்துநெளியும்புழு வூத்தைநரம்புகளும்
நாத்தமலங்களு முந்திரக்கும்பி (போ)
சந்ததமுமடியேன் யெந்திரம்போலே
வந்தெழுவனையிலும் நொந்துமிருந்தேன் (போ)
கொழுத்தவாணிகள்போலே மிருத்துவிரும்புமென்னை
வயிற்றிலிருந்துபடும் வருத்தமென்னசொல்வேன் (போ)
மாதர்கள்பீதினில் மையல்கொண்டேகிவிடும்
வேதனைகொண்ட வெகும்பயலானேன் (போ)
அன்னல்கோபால கிருஷ்ணன்பணியுந்திரு
அம்பலமேவும் பொன்னம்பலவாணு (போ)

வசனம்.

ஜென்மமே நஷ்டம் அதிலும் புலையனாகப் பிறப்பது மிகவுங் கஷ்டம் என்று நந்தனார் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-கரகரப்பிரியை—ரூபகதாளம்

பல்லவி.

[illegible]ண்டாம் இனி எந்தஜென்மம்வந்தாலும்வரட்டும்(இ)

நத்திரடியினில்மந்திரங்களைசொல்லி
வந்தனைகள்செய்துசிந்தைநம்பிறாத இந்த

வேதமறிந்தவர்பாதம்பணிந்தவா
போதமடைந்திடாத்தீதடைந்தேன்பாவி இந்த

பாவிப்பறையனீ தூரவிலகென்று
ஆவிதவித்திடப்பாரிலுனைதந்திடும் இந்த

கீர்த்தனம்-இம்-ஆகிரி-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார் சிதம்பரத்தெல்லைவலஞ்சுற்றினார்

அநுபல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார் தேவருமறியாத
எல்லைவாசல்கடந்திருளறவேண்டி தில்லை

சரணங்கள்.

சாதிக்குறையத்தானே சந்ததமுமினைந்து
வேதனைகொண்டுள்ளம் வெதும்பியேவாடி
பாதிப்பிறைபணியும் பரமசிவனைக்கண்டு
போதமடைந்து பரிபூரணமாக தில்லை

மோகவலைக்குட்சிக்கி முழுமூடனாகவே
போகமேயில்லையென்று புத்திகெட்டேனே
பாகனைவேண்டிடல் பரவசமாகியே
ஏகாந்தத்திற்றன்னை விருத்திட்டுச்சுகிக்க தில்லை

ஓராறுதாண்டியேயுன் மணிக்கோட்டைகள்
சீராறுகாணாத சிதம்பரரகசியம்
ஈராறுநாள்கொண்டு இருத்திப்புலன்றனையும்
போராறபெருகியே பெருவெளிகாண தில்லை

வசனம்.

இப்படித் தில்லைத்தலத்தைவிடாமல் சுற்றிவந்தால் தன்னிடம் சுவாமிவருவாரென்றும் மனதைப்பார்த்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

வருவார்வருவார்மனமேகிமயங்காதிருசொன்னேன்சொன்னேன்
வேணுந்தருவார்கருணைபுரிவார்திருவம்பலவன்
பாதநிழற்தருவார்சாதிமுறையினென்றும்பாரார்நீயதை
உறுதிகொள்ளவேறுமெய்யன்புடன்
அரகரவென்றொருகாற்சொன்னாலும்போதும் வருவார்

வசனம்.

தன்னைரட்சிக்குஞ்சமயம் இதுதானென்றுசொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம-தனாசாரி-ஆதிதாளம்.

பல்லவி.

இதுநல்லசமயமையா ரட்சிக்க இதுநல்லசமயமையா

சரணங்கள்.

இதுநல்லசமயமையா வென்னைரட்சித்தாலும்
சமமகேசநடேசபோதா இதுநல்ல
பாலகிருஷ்ணன்போற்றும் பதங்களிலோக்காண
நிலமுள்ளமுக்திசேருமாற்றிகே இதுநல்ல

வசனம்.

இவ்வளவுசொல்லியும் இரங்காமற்போகவேண்டியதென்னவென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

இரக்கம்வராமற்போன தென்னகாரணம்சுவாமி
கருணைக்கடலென்றுயெந்தன் காதில்கேட்டுச்சேவித்தேன்

சரணங்கள்.

ஆலமருந்தியண்டருயிரை யாதரித்தவனாகீர்த்தி
பாலகிருஷ்ணனைப்பாடித்திரியும் பணிகதிம்மகடாஜமூர்த்தி
பழிபெருந்தியாகனென்சரிகளும் பாவிநதிதென்றிதம்பரமென்று
வெளிபத்தவர்வழிபெற்றவர் கனகசபாபதிப்படி

விருத்தம்.

அண்டரைநிபாவையும் வெள்ளியளமைந்தும்
குன்றிட ... புள்ளியையாயேருவந்தும்

வின்றிடாமலேயீசன் றனக்களித்தவிவேகம்
மன்றுளாடியபாதத்திலேமனம்வருமே.

வசனம்.

மகாபுண்ணியசாலிகளுக்கு முத்திவருமேயன்றி தனக்குவாராதென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தனாசரி-ஆதிதாளம்.

சாதியில்தாழ்ந்திடும்புலையனுக்கும்பர கதியோ வேத
சாஸ்திரஞானங்களுமேதறியாதது விதியோ
கண்டதைக்களைவகைசெய்தருந்திய தேகம் மன்னுள்
நடனதெரிசனங்காணவென்றுளதி மோகம்
எந்தவழியைக்கண்டேறுவது ஞானசபைக
கீசனுக்கன்றோதெரியுமந்தவு பாயம்
சிதம்பரமபோவேனென்றுனையா பாவி இந்த
ஜென்மமெடுத்துவீணாகத்தவிக்குதே ஆவி

வசனம்.

இப்படிநான் ஈனசாதியாயிருந்தபோதிலும் உம்முடைய சரணார விந்தத்தில்வைத்தபுத்தியை மறந்தவனல்லவென்று சொல்லுகிறார்.

துக்கடா-இ-ம்-மணிரங்கு-ரூபகதாளம்.

பல்லவி.

எப்படிகேட்டாலுந்தன் பொற்பதமறவேன்காணும் எப்படி

சரணங்கள்.

அற்புதமாகியதில்லையம்பலவாணனோன்
சொற்பனத்திலுமையன்றி மெய்ப்பொருளாகவும்வேண்டேன்
தப்பிதமெத்தனைசெய்கினும்
கைப்பிடித்தாண்டுகொள்ளும் எப்படி

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இவ்வண்ணமிரவுபகல் வலஞ்செய்தங்கெய்தரிய
அவ்வண்ணம் நினைந்தழுங வடித்தொண்டரயர்வெய்தி
மைவண்ணத்திருமிடற்றார் மன்றுநடங்கும்பிடவே
எவ்வண்ணமெனநினைந்தேயேசறவினொடுந்துயில்வார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வலம்வந்துகொண்டு உள்ளே போகக்கூடாதென்னை நினைத்துவருந்தப்பட்ட உயர்வுபொருந்திய அடியவர் வேசாறி கரியகிறமுள்ள காறுத்துகிலையுடையராயாமி கனகசபையில் ஆடுகின்றகூத்தை எப்படி தரிசிக்கலாமென்று விசனத்தோடும் நித்திரை செய்வார் இப்படி நித்திரை செய்து மறுபடியும் எழுந்து சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-கவ்டா-பிராகு-ஆதிதாளம்.

பல்லவி.

விருதாச்ஜென்மமாச்சேயெங்கும் விருதாச்ஜென்மமாச்சே
சதாசிவமுலமயன்சந்நிதானத்திலிருந்துதிதானம்பெறாமல் (வி

சரணங்கள்.

முத்தியளித்திடும்மூர்த்தியைக்கண்டு
பதநிலையடைவெனிப்பதமடையாமல — விரு
பொற்சுழலகையப்பொருளிருந்து
நக்கரமேபதந்தனையேப்பாராமல — விரு
தில்லைச்சந்நிதியில்தரிசனங்கொடுத்து
எல்லையிலவரென்றிரங்கியழைத்தும் — விரு

வசனம.

தனதுபதவிக்கு யோக்கியனல்லவென்று தள்ளுவாரோ கொள்ளுவாரோ அப்படி தள்ளினாலும் தில்லையிலேயே தானேனாதேகத்தைவிடுவேனேயன்றி திரும்பிப்போகமாட்டேனென்று சொல்லிப்புலம்புகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

தள்ளுவாரோவென்னைக் கைக்கொள்ளுவாரோ

சரணங்கள்.

தள்ளிவிட்டால்நான்போகேன் தவித்திருக்குஞ்சபையமல்ல
அள்ளிவிட்டென்னன்பை அம்பலவாணனிருக்கால் — தள்

வைதவனென்றபிமானமிச்சையறும்நிஷ்டைபண்ணி
மலபிறந்ததுவெளியில் மருவாதபாவியென்று — தள்

காமமிக்கப்பொய்புடலே நானென்றெண்ணிநான்சுமந்து
நாமபட்டதன்பலமெல்லாம் துலைந்துதென்று இங்கேவந்தும் — தள்
பாலதிருஷ்வான்தேடிவரும் பாதமலர்காணேன
மெல்லியர்மோகங்கொண்டு வீத்தியத்திருந்தேனென்று — தள்

சிந்து.

அடடா இதென்னசென்மமென்று அத்தனைதனைக்கலைகற்றிவர்கள் இரவுபகலோயாமல் இலைஈசன்கண்டு விசுவாசமுடன் பாலகிருஷ்ண ன்பணியும் திருப்பாதமுள்ள தில்லைநாதனைவன் கனவிலுருவாகியது.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்,

இன்னல்தருமிருபிறவியிது தடையென்றேதுயில்வா
ரன்னிலையேயாபலத்து ளாமெவாரதிக்கினிதில்
மன்னுதிருதொண்டாவர் வருக்கவெல்லாந்தீர்ப்பதற்கு
முன்னணைந்துகனவின்கண் முறுவலொமெருள்செய்வார்,

வசனம்,

இப்படித்திருநாளைப்போவாரென்னும் நந்தனார் இரவுபகலோயாம ல்தில்லைத்தலத்தைச் சுற்றிவருவதால் தேகவருத்தமடைந்து வருத்த த்தினால மயங்கிச்சோர்ந்து நித்திரையடைந்தார் அந்தநித்திரையிலேநட ராஜமூர்த்திவந்து சாக்ஷிதந்துசொல்லுவார் எனக்குமிகவும் பிரியமு ள்ளநந்தனாரை யும்மிடத்தில் நம்முடையபத்தர்களாகிய வேதியர்களை வரச்சொல்லுவோம் அவர்களமுன நீர் அக்கினிப்பிரவேசமாகியெழுந் துமறைபடித்து வேதியர்களுடனே சபாபிரவேசம பண்ணுமென்று ணாபகார்த்து ஐயன் அந்தாத்தியானமானார் நந்தனார் கனவில் சாட்சியா னதைக்கண்டு களித்து விழித்து தெளிந்து அளவில்லாத சந்தோஷங் கொண்டெழுந்திருந்து சுவாமியைத தோத்திரம்புரிந்துசொல்லுவார்,

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சந்நிதிவரலாமோ சுவாமி தெரிசனந்தரலாமோ சந்

இல்லறவாழ்வாம் பணிமுடி
இருக்கேனென்று மிகவாடி
அல்லும்பகலும் கொண்டாடி
அடியேனாகனக சபைநாடி சந்

வீதியிலேசுற்றே வந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துக்கொண் டிருந்தேன்
சாதியிற்றாழ்ந்தவென் றறிந்தேன்
தனித்திருப்போமென்றிங்கே வந்தேன் சந்

காலாக்கினிக்கனல் மூட்டி
காலாதிமணையுமே லோட்டி
பாலாறுபெருகவேபெய்யக் கூட்டி
பார்த்துமில்லதான் சேட்டி சந்

வசனம்,

நந்தனுர் தான்கண்டசொற்பனத்தைக் கொண்டாடுவார்,

கீர்த்தனம்-இ-ம்-காதராமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சொற்பனங்கண்டுகொண்டேன் அதிசயமாய்ச்
சொற்பனங்கண்டுகொண்டேன்

அநுபல்லவி,

சொற்பனங்கண்டுகொண்டேன்எல்லாக்கற்பனையென்றறிந்தேன்வேத
தற்பதவாகியமே வுருவாகி யற்புதநடனமபுரியவென்று சொற்

சரணங்கள்,

அம்பிகைமணாளன்மழுவணிந்திடுஞ்செங்கோளன்செம்பொன்னம்
பலத்தவிலானந்தனைக்கொண்டாடமண்டலத்
தோரானைநிற்க மண்டபமணிமேடையைச்சேர்ந்து மனதுருக மறலிருக
காரத்துருக வரத்துருக சொற்
மகாகனாகவிஷாகரில்லாதானையும வருந்தி யழைக்கும்பொல்லாதாகிலமா
யப்பிணிவயல்வெல்ல மருந்தாய்ச்சொல்ல வழிபிறச்செல்ல நல்லபண்ணவர்
முரசடிக்கபஞ்சவிவியாக்கிரமபாதர் துதிக்கமாயன் கோபாலகிருஷ்ண
னாகவிக்க உடுக்கையடிக்க உலகத்துறக்க சிறக்க சொற்

வசனம்,

நந்தனுர் தான்கண்டகனவு மெய்யமோ பொய்யோவென்று சந்தேகப்படுவார்,

கீர்த்தனம்-இ-ம்-சூரியகாந்தம்-சாப்புதாளம்,

பல்லவி,

கனவோ நினைவோ கண்டதுயின்றோ
மனதிலுறுதிகொள் வழிபொன்றுங்காணேன் கனவோ
சிற்றிணைகளிலொரு நிக்கனும் நாயவந்து
முகந்தருகிவனென்று நத்தப்பேபினதுண்டு கனவோ
திருமிசழ்ந்து நன் நம நா தமபுலையனென்னை
யாழுமபரமபத்து மகருமெனறழைத்து கனவோ
பட்டமிகருந்தியகது கட்டிபெழுபடிபொரு
பட்டவெளியைபாட்டி கட்டணியிட்டது கனவோ

வசனம்,

தான்கனவில்கண்டதுபோல் சுவாமி வருவாரோவாராரோ வென மனசஞ்சலப்படுவார்,

கீர்த்தனம்-இ-ம்-மாமராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

வருவாரோவாரங்கருவாரோஎந்தன்
மனதுசஞ்சலிக்குதையோ எப்போ வரு

திருவாரூந்தென்புலியூர் திருச்சிற்றம்பலவாணன்
குருநாதனுக்கவந்தனைசகன் குறைதீர்க்கக்கனவுகண்டேன்
இருவினைப்பிணிகளைக் கருவறுத்திடுகிறேன்
பயப்படாதேயென்றுசொல்ல வரு

மறைநாலும்வழுத்ததறியா மகிமைபெருநடராசன்
கனையுறுஞ்சேவடியை நாடிநம்பினவனுனல்லவோ
அனுதினஞ்சிவசிதம்பரமென்ற
வடிமையேற்கருள்புரிந்திடாமிங்கே வரு

மணிமார்புஞ்செஞ்சடையும் பார்க்கவெகுமையலானேன்
பணியுங்கோபாலகிருஷ்ணனிடம் பரமதயாநிதியல்லோ
பவகடலடிக்கடி பெருகுதுகிலைக்குமோ
மலைக்குறுகனையேற்ற வரு

வசனம்,

நந்தனர் இப்படி அநேகவிதமாய் வருவாரோ வாராரோவென்று பலவிதமாகக் கொண்டாடுகிறார்,

திருநாளைப்போவார் புராணம்,

விருத்தம்,

இப்பிறவிபோய்நீங்க வெரியினிடைமூழ்கி
மூப்புரிநூன்மார்பருடன் முன்னைவாவெனமொழிந்த
வப்பெரிசேதில்லைவா ழந்தணர்க்குமெரியமை
மெய்ப்பொருளா னருமருளியம்பலத்தேமேவினர்,

வசனம்,

நந்தனர்கனவிலேவந்து சொல்லிய நடராஜமூர்த்தி தில்லைமூவாயிரம்பேர்கள் கனவிலேவந்துசொல்லுவார் பக்தர்களே எனக்குமிகவும பிரியமுள்ளவனுகிய திருநாளைப்போவாரென்னும அழகாகியகோமத்தைக்கொண்டு என்னைக்காணவேண்டுமென்று தன்னைக் காணிக்கைகொண்டுசோதியிற்ருழ்ந்தவனென்று மிகவுந்தழைந்துகொண்டிங்கேவரலா

காமெதன்றுபயந்துக்கொண்டு தன்னைத்தவிர மற்றதெல்லாம் அனித்திய மென்று பத்திபண்ணியடையவேண்டுமென்றுசில்லே யாச்சுறுத்திக்கொண்டு தெற்கூர்ருளத்தங்கனாயிலேகிறது அப்படி அனந்தங்கொண்டு இருக்கிறார் அவனைவைப்போல்நினைதகாதீர்கவெல்லோருமபோய் அழைத்துவாருங்களென்றுசொல்லி சுவாமிமறைந்தார் இப்படிக்கண் டகனவை மூவாயிரம்பேர்களும் பேரம்பலவாசல்வந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுவார்கள்,

தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்,

கண்ணிகள்,

அதிசயமொன்று கேளப்பா தீக்ஷதரே
  யர்பதாததிரிப்போது — லென்னேஎன்றன்
அபிராமசமாகத் தப்பிரவும்பல
  வாணைகனவில்வந்தா — ருன்னே
வாஸ்தவமெனக்குமிக்த வண்ணமாகக்கனவில்
  வந்துரைத்தாரயிக்தே — காடிஉத
யாஸ்தமயமாகுமுன் னவாருட்படிக்கு
  அழைப்பதுதகமென்று — சோடி
அபோதக்குவக் தவப்பண்ணுதிக்ஷதர்
  ஆமாமிதுநிச்சயந்தான் — எங்கோன்
செப்பியசொற் செக்திவளர்த்திடச்
  செய்யவேண்டுமெவ — சியந்தான்
அவசியமென்கிறீர் காரியந்தெரியாமல்
  அருககடுக்குமோ — புலையன்சிறந்த
தவசிரேஷ்டர்சூழர் தலத்தினில்வருகத்
  தலையதமேதா அவன்பந்தா — லலைவன்
பத்தியுள்ளவனோபரமனுக்குயிர்தோழன்
  யதுஞ்சலிபுவிப்பாதா — காட்சிசிவன்
சித்தத்தின்படிசெய்துசெனனங்கடைப்போம்
  தெளிவிப்பகளிக்கச் — சூடசி
என்றாரக்குசியசங்காதிட்சதர்
  இன்னமுந்தாமச — மேதோகீச்சன்
ஒன்றாங்கதிருச்சக்திந்தவருவ
  பொருக்காருக்கட்குத் — தகாதோ
சொல்லுமென்றுவாமென்றுருக்கட்குச்
  சித்தத்திவுள்ளசக் — தேசம்தெளிய

அல்லும்பகலுமோயாமேசொல்லிரா
மாராய்பவற்குமேருக்ர சாகரம்

தனும்படிபேசிச்சந்தேகந்தெளிவது
தத்தென்றுலாத்த மொழியேகம்

பெருங்கூட்டமாகவேகூடிச்சென்றாவர்
வேதமறந்தொரு வழியே

வசனம்,

தில்லைமூவாயிரவர்கள் சாஸ்திரிமார்களிடத்திற் சந்தேகந்தெளிதல்

விருத்தம்,

மறைக்கிழவரிவ்விதஞ்சென்றார்களங்கே
மனுவிக்கியானிகளாயிரவாதஞ்செய்து
வந்தகாரியமேதோஉரைப்பீரென்ன
மற்றுளானவர்தங்கள்கனவிற்றோன்றி
குறைத்தமதிபுலச்சாதியந்துதித்தோன்
கோதிலாநந்தனெனபோனவநல்லன்பன்
கூறுமிவ்வூரெல்லைவருவானவனை
கொணர்ந்தவனைத்தீமுழ்கச்செய்தேஅப்பால்
முறையொழிசந்நிதியில்கம்முன்பாக
விடுங்களென்றருளிச்செய்தவர்மறைந்தார்
உரைக்கேநார்முன்னிருதெரியச்சொல்லவந்தோ
மொழியுமருத்தரம்யாதென்றார்நீதி
அறிந்தவன்றோராமந்தப்படிக்கேசெய்வ
தழகாகுமென்றனர்பின்மகிழ்ச்சியாலே
அந்ததில்லைமாநகரத்தெல்லைச்சுற்றி
யாவோர்க்கதனைத்தேடுவாரே.

திருநாளைப்போவார் புராணம்,

விருத்தம்

தம்பெருமான்பணிகேட்டதவமறையோரெல்லோரு
மம்பலவர்திருவாயின்முன்பட்சமுடனின்று
மெம்பெருமானருள்செய்தபணிசெய்வோமென்றேத்தி
கம்புரிவுபெருகவருந்திருத்தொண்டர்பாற்சார்ந்தார்.

வசனம்.

தமதுபிரானாகிய சபாநாதரிட கட்டளையைக்கேட்ட் தவம்பொ
ருந்திய பிராமணர்களெல்லோரு மம்பலவாணரது கோயிற்றிருவாசல்

முன்புகூடி பயத்தோமெம்முடைய ஆண்டவாருள்செய்த வழியத்தைச்செய்வோமென்று வணங்கி அன்புமேற்பட்டிருக்கும் திருநாளைப்போவாரைத் தில்லைமூவாயிரவர் தேடவருகிறார்கள்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி,

தொண்டனாகாண்கிலமேதில்லையில்வந்துதொண்டனாகாண்கிலமே,
அண்டசராசரமென்கும்படியளந்து
மன்றுளாடியமல்லவர்க்கடிமை தொ
சொல்லும்பொருளுமற்றுச்சோதிமயங்கொண்
டல்லும்பகலுமற்றம்பலவாணன் தொ
அஷ்டதிசையும்பரிபூரணமாகவே
மட்டில்லாதுவளர்க்கோங்கியநாதன் தொ
வாபியடங்கிடவேளைவழிகண்டால்
தேசிகவடிவுடன்தெரிசனந்தருவார் தொ
பாலகிருஷ்ணன்பணிந்தேத்தியபாதன்
கோலச்சிலம்பணியுங்குண்டலநாதன் தொ

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி,

திருநாளைப்போவார்தெரிசனங்காணத்
தில்லைமூவாயிரமுனிவர்கள்வருகிறார் திரு
பக்திவெள்ளம்நதிகரைபுரண்டோடும்
பரமானந்தக்கடல்முழுக்காட்டும் திரு
ஆகாரசங்கரமிலமென்றும்சொல்லும்
அநித்யசடத்துக்கபாயத்தைவெல்லும் திரு
அடியவராமெத்தப்பெரியவரென்று
அம்பலவாணாருள்விடைகொண்டு திரு

இதுவுமதுசித்து,

பதம்-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்,

பல்லவி.

தேடித்திரிந்தார் பாருடேசர்ஞர்தம்மைத்
தில்லைமூவாயிரவர் யாரும்

அநுபல்லவி,

கடுஞ்சதுர்வேதப்பிர தாசனை
கடுங்கைசிவகாமிப்பிர ணேசனை
ஆடும்பதநடன சபேசனை
ஆவலாகத்தொழுதேவரும் நேசனைத் தே

சரணங்கள்,

தண்டாமரைமலரத் தடமும்-மாதர்களாடிக்
கொண்டாளடித்திடு மிடமும்-அன்னமளிக்க
உண்டானந்தங்கூறு மடமும்-சோரர்பரவுஞ்
சண்டாளராழும்வா ழிடமும்-அன்றிச்சூத்திர
சாகிமுதலானபல வாடையும்-பல்லாண்டு
ஓதியுலாவிவரு மேடை-மனுவிக்கியான
நீதியுணர்ந்தோர்கள் மாடமின்னமும்பல
மாதிரிகளாமுக்கின்னே மேடை-உன்னதமாகக்
கொங்குமிகுததருவெங்குமடைத்திடுஞ் சோலை-கரும்பஞ்சோலை
தங்குமுயர்ந்துகதித்திடும்வாழையின் சோலை-தாழையின்சோலை
தெங்குமிலுப்பையுமொன்றுபொருந்திய சோலை-காவினிற்சோலை
துங்கமதானபலாக்கமுசோங்கிய சோலை-மற்றுள்சோலை
எங்குஞ்சூழ்ந்திப்பார்த்துமறையோர்கள் தங்கள்தங்களங்கமேங்க
நதியிசமும்
பொங்கரவணிந்தசிவசங்கரன்கிருபை யிதன்றே யோங்க
கூக்குரலிட்டுங்
சங்கையறச்சென்னியிற்கரங்களைக் குவிததெங்களைத் தாங்க
மனமுவந்து
இங்கேயெங்கள்பங்கினிலிருந்து மேழைவருத்தம் நீங்க
கிருபைசெய்தற்கு
உன்னதேகடவுளென்றுஉவந்துக்கொண் டாடி
உரியவேதமந்திரங்கள் பாடி
முன்னேசொன்னநந்தனார்வர நாடி
முனங்கோடைக்காற்றெனவிரைந் தோடி
தேடித்தேடித்திரிந்தார் பாரும் நந்தனார்தம்மைத்

வசனம்.

இந்தப்பிரகாரம் தில்லைமூவாயிரவர்களுந்தேடி அலுத்து ஒரிடத்தில்வரவருங்கூடி சுவாமியைத்துதிசெய்கிறதென்று நிச்சயஞ்செய்து தோத்திரஞ்செய்கின்றார்கள்,

தரு ௩௰-கல்யாணி-அடதாளம்.

பல்லவி.

உனதுமகிமையை யொருவரறிவார்களோ
உலகிலுள்ளோரையனே

சரணங்கள்.

கலியிலேயக்கிரகங்களுக்குச்சொன்ன	அந்த
காரணமறிந்துகொள்ளவில்லை	யெழுந்த
இனத்தார்க்காங்கள்யாருமிசைந்துகொருமித்	திக்த
எல்லோருமுருகக்கேசடியவினைத்தோமெங்களுக்	கந்த
இல்லாமெல்லாசகத்தெருநவளு	மகப்பட
வில்லேயென்னசெய்வோம	ஸ்திரப்பட-உள்ள
அடையவாதிரிபுரமெல்லாகவே	முடித்த
வளைபாகமானமறுவுஞ்சைவிலே	பிடித்த
விடப்பாகனைகானமெட்டும்பாடி.	கடித்த
பொப்பாதவர்கலிர்ந்தாலோயாதென்றே	படித்த
வாதவீசமிக்கருள்செய்	ஐயனே
வரசமிகர்புகராவத்	தாய்யனே-உன்ன
அல்லேசிவகாமியனுமென்வளர்	தில்லே
யம்பொனவவணர்வாகுமேலாத்காத்தொருதுய	தில்லே
உன்னேயன்றியிலகத்துக்குப்பொருள்	மில்லே
யுகதமானெயங்கடகுரியதுணையு	மில்லே
ஒதுநகளுர்தம்மையாச்	செய்யும்
வழ்வினை தவிர்த்தவர்க்குஅருட்	செய்யும்-உன்ன்

வசனம்,

இவ்விதமாகச் சுவாமியைத்துதித்துத் தில்லைமூவாயிரவர்களனை வரும் கந்தனுடைத்தேடி யனுத்துவருமார்க்கத்தில் ஒருப்புறமாக கினா நுக்கொண்டிருந்த கர்தனுர் வேதியனைக்கண்டு தூரயிலகிநின்று தலை வணங்கிச்சொல்லுவார்.

விருத்தம்,

திட்டமுடனடியனைக்காளவொபாநிகழ்ந்த் தவம்புரியுந்திலலமன்று,
எட்டபிடவராசன தலவின்கண் சொன்னமொழி கமபிக்வகாணடு;

இட்டமுடன் திருநாளைப்போவாரிடம்வேதியர்களேருமலோது, இட்டி நெருங்காதையுமென்றேவில்லையார்வார்த்தைகேளீரென்றார

கீர்த்தனம் இ-ம்-செங்கல்ர-ரூபகதாளம்.

பல்லவி,

இட்டநெருக்கிவருகாதே சுவாமி-காதில்
கேட்டபேர்க்குபாவமவரு மெனதுசென்மம்பூமி-யிட்
இட்டர்புழக்கில்லைதனில் செழித்துவாழும்வேதியர்கள்
இஷ்டமிதுவல்லவேயென்றுசொலலமிவனுமோபுலையன்-இட்
உலகினில்கடைச்சாதியெந்தனுக் குவமையாருமில்லையே
பலவிததுஷ்டகருமஞ்செய்து பாரில்வந்தபுலையன்-இட்
வேலைசெய்துவுடம்புவளர்க்க வேனுமந்தநாயடியேன்
தோலுமெலும்புமுதுகினில்சுமந்து அலையுமடபுலையனையே-இட்
செத்தமாடிழுப்பதெனது சேவகம்படித்துமெல்லை

வசனம்,

இப்படிவணங்கிச்சொல்லிய திருநாளைப்போவாரைப்பார்த்துவேதியர்கள்சொல்லுவார்கள்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

சாதியிலுயர்ந்தாலென்ன இந்தப்பேரும்பெருமையுமில்லையே
சாதிப்பேருங்காரணமதாலே சங்கரனருலகிலவந்து
ஆதரவுடனைவரங்களிய்ந்து அழைப்பாரோபார்ப்பாரோசேர்ப்பாரோ
அளிபெருஈசன்கழலை யறிவிலுன்னிபடிபணிந்து
தெளிந்திய[illegible]ழைமுத்திதேடுமோ நாடுமோகூடுமோசாதியில்

வசனம்.

இப்படிச்சொல்லியபின் தாங்கள்வந்தகாரியம்பேசுவார.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

ஐயரேபார்ப்பாருடைய ரவியப்பொழுதனைந்தோம்
வெய்யவழலையாத்துமக்குத் தரவேண்டியெனவிளம்ப
வையுமெனத்திருத்தொண்டர் நானுய்ந்தேனெனத்தொழுதார்
தெய்வமறைமுனிவர்களுந் தீயமைத்தோமெனமொழிந்தார்

வசனம்,

ஐயரேசாருடையசட்டளையால் இப்போது வெல்விதமாகிய அக்கினியைமூட்டி உமக்குஅதில்முழுகும்படி கொடுக்கவந்தோமென்

றுசொல்ல இனியமனையுடைய திருநாளைப்போவார் அடியேன் கட்டளைகடைதப்பறிலேனென்று அவர்களைத் தொழுவார் தெய்வீகமா கியவேதத்தையுணர்ந்தபிராமணர்களும் நீவிர்க்குநன்றென்று சொ ல்ல நந்தனார்கேட்டுச் சந்தோஷமடைந்து நான் இனைத்தான்மு ந்தருளேனென்று வேதியர்களைப்பார்த்துச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

கண்டேன்கலிதீர்ந்தேன் பவக் கடல்கரையேறிவந்தேன்
சோதிமறைமுடிவாஞ் சொல்விருந்தியீசன்
பாதம்பணிவிடைசெய் பாக்கியவானுமைக் கண்
எல்லவர்க்காணிமுன்னே யிருள்விலகுமுங்கள்
சொல்லைக்கானுமுன்னே துன்பங்கள்தீர்ந்திடக் கண்
கள்ளங்கருதசெய்யுங் கல்லுநகலேயுங்கள்
உள்ளங்குடியாய்க் கொண்டாருங்கள்தெரிசினம் கண்

வசனம்.

நந்தனார் நான்பிள்ளைசாதியாயிருந்தபோதிலும் தெய்வ மிரங்கிற் றென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தனாசரி-ஆதிதாளம்.

எனக்குமிரங்கிற்றே நான் செய்தவேழைநாயல்லவோ
தனக்குன்தானுயிருக் ககிலப்பிரபஞ்சமுந்
தன்னுடைக்கிப் பொன்னம்பலவன்திருவுப என
அல்லாபகலு மருந்தவஞ்செய்தினு
மறியாதொருவரும் பகலத்தெய்வம என
நான்குமறைமுடி வுங்காணவிவேன
ஞானிலுன்மைஉலகமறிய என

வசனம்,

நந்தனார் என்னதவஞ்செய்தேனோ இவ்வுலகின்கண் யாவருக்கு கிடைக்காதபாக்கியம் கிடைத்ததென்று சொல்லுவார்:

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்.

அம்பலவாணனைத்தேன்புலியூரானை நம்பிப்பணிந்தேனே
ஆசைகொண்டுசெய்து கும்பிட்டிருந்தேனே
தில்லைபதியில்வந்து எல்லைகடந்தேனென்று
அல்லலறுத்தேனே சஞ்சித வினையெல்லாம்வறுத்தேனே
தாண்டவமாடின ஆண்டவன்சேவடி
வேண்டித்துதித்தேனேமுக்குணத்தை தாண்டிக்கடந்தேனே

எந்தனென்றென்றெந்தவேளையுமாயுஞ்
சிந்தைநழுவிற்றோசேர்தவனென்று   சிந்தைநழுவிற்றோ
தெள்ளுதமிழ்ப்பாடியுள்ளமுருகியுள்ளில்
கள்ளங்கருகிற்றோகருத்திலெட்டா   வெள்ளம்பெருகிற்றோ
ஆசைவலையைப்போட்டுமோசப்படுத்துஞ்சில
பாசங்குலைந்தாரோஅளவிடா   இலேசக்கொலைந்தாரோ
பெண்ணூரிடுமாலுக்கொண்ணுமெனச்சடைத்
தண்ணுதலணைந்தாரோகருணைபொங்க   கண்ணாலணைத்தாரோ
அடுத்துவந்தவனென்றுபிடித்தபேய்களையோட்டி
தடுத்தாளக்கொண்டாரோபரமபதந்தேடுந   தாளைக்கண்டாரோ

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்,

மறையவர்கள்மொழிந்ததற்பின் றென்றிசையின்மதிப்புறத்துப்
பிறையுரிஞ்சுந்திருவாயின் முன்னாகப்பிஞ்சகர்தன்
இறையருளால்மறையவர்க ணெருப்பமைத்தகுழியேத்தி
இறைபவர்தான்மனங்கொண்டே பெரிகுழல்வலங்கொண்டார்.

வசனம்,


அப்படிபிராமணர்சொல்லினபின்பு தென்திசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனைத் தவழ்ந்துபோகும்படி உயர்ந்திருக்கும் திருககோபுரவாசலுக்குமுன்னே சுவாமியின் நிறைந்தஅருளையோடுங் கூடிய கட்டளையால் பகர்ந்திருக்கின்ற நெருப்பின்குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில்தியானித்து அக்கினியைச்சுற்றி வலமாகவந்தார்.

இதுவுமது-விருத்தம்.

கைதொழுதுநடமாடுங் கழலுன்னியழல்புக்கார்
எய்தியவம்பொழுதின்க ணெரியின்கணிம்மலமாய்ப்
பொய்தகையுமுருவொழித்துப் புண்ணியமாமுனிவடிவாய்
மெய்திகழ்முந்நூல்விளங்க வேணியனார்முடிகொண்டாள்.

வசனம்.

கையாற்கும்பிட்டுநடனஞ்செய்கின்ற நடேசரதுதிருப்பாதங்களை மனதில்உருதியாய்நினைத்து அக்கினியில்புகுந்தார் அப்படிச் செய்த போது அந்தநெருப்புல் இந்தஉலகம்பந்தமாகிய நிலையில்லாத உடலத்தையொழித்து ப் புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனியின் வடிவாய்த் தேகத்தில் பூநூல்விளங்கச்சடைமுடியோடும் வெழுந்தார்.



கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி,

யாகோற்பவமானா நந்தனார் அரனருளால்
யாகோற்பவமானார்

அநுபல்லவி,

சிவஞானாந்த வாக்கியம் சித்தத்திலெண்ணி
சிறந்ததேமிக சிலாக்கியம்
தவமுவனேக பாக்கியம
தன்னைக்கொண்டதே யோக்கியம்
தபனனோடுயர் கவனமேவிவரு
மெவருங்காந்தருவ ரெவருங்கண்டுதொழ யாகோ
கையைச்சிரமேற் பதித்து சிவசிவயென்று
கனகசடையைத் துதித்து
செய்யகுண்டத்திற் குதித்து கதிரவன்போல்
செனித்துதேவர்புகழ் நடித்து
சித்தியாகியபதம் முற்றும்பாம்புபுலி
பத்தியாய்த்தொழும் பதத்தைக்கண்டுதொழ யாகோ
காதிற்குண்டல மிலங்க முப்புரிநூலும்
கதித்தமார்பிட மிலங்க
ஓதுஞ்சடைகள் துலங்க அவனைவிட்டு
ஓடியேவினை கலங்க
ஏதமற்றசதுர் வேதமோதிவரும்
கீதவேதியர்கள் போதுமென்றுதொழ யாகோ

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்,

செந்தீமேலெழும்போது செம்மலர்மேய்வந்தெழுந்த
அந்தணன்போற்றோன்றினா ரந்தரதுந்துமிநாதம்
வந்தெழுந்ததிருவிசிம்பில வானவர்மகிழ்ந்தேபார்த்துப்
பைந்துணர்மந்தாரத்தின் டனிமலர்மாரிகள்பொழிந்தார்

வசனம்,

சிவந்தநெருப்பில்நின்றும் எழுந்தபொழுது செந்தாமரைப்புஷ்பத்தின்மேல் உதயமாயெழுந்தருளிய பிரமாவைப்போல பிரகாசித்தார் பெருமைபொருந்திய ஆகாசத்தில் அந்தரதுந்துமியின் கோஷமா

யின

னதுஉண்டாயிற்று தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின் குளிர்ச்சிபொருந்திய மலர்களை வருஷமாகச்சொரிந்தார்கள்.

இயலுமது-விருத்தம்.

திருவுடையதில்லைவாழந்தணர்களுந்தொழுதார்
பரவரியதொண்டர்களும் பணிந்துமனங்களிப்பயின்றார்
அருமறைகுழங்குமன்றுளாடுகின்றகழல்வணங்க
வருகின்றார்திருநாளைப்போவாராமறைமுனிவர்

வசனம்,

ஞானசம்பத்தையுடைய தில்லையில்வாழும் பிராமணர்கள்கைகூப்பினார்கள் பரவுதற்கரிய மற்றைச்சிவபக்தர்களுந் தொழுது மனதில் களிப்படைந்தார்கள் வேதங்கள் முழங்குகின்றகனகசபையில் ஆடுகின்றபாதத்தை வணங்கும்பொருட்டுத் திருநாளைப்போவாராகிய ஒருவேதமுனிவர்வருகையின ஆனந்தத்தாண்டவத்தை வருணித்துச் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதெய்தெய்யென்றுடுவாருவர்
தத்திதெய்தத்தித்தெய்யென்றுடுவார்

அநுபல்லவி.

ஆனந்தமென்னுடொருகாலையெடுத்துத் — தாதெய்

சரணங்கள்.

அடையாளசாமெங்குமதிங்க
ஆதிசேடனார்முடிகளசைந்திருக்க — தாதெய்
சிலம்பொருந்தியமுனிவர்கொண்டாட
திங்களைச்சூடியசெஞ்சடையாட — தாதெய்
பார்புகழுந்தில்லைச்சிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந்தேத்தியபாதன் — தாதெய்

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி ரூபகதாளம்.

பல்லவி.

குஞ்சிதபதத்தைத்தாரும் மனசஞ்சலப்பாவத்தைத்தீரும்

அநுபல்லவி.

செஞ்சிலம்பணையக் — கனகசபைதனில்
செஜ்ஜுணக்கதஜெஜுணக்கதமி — திமிதத்தோமென்றுடிய-குஞ்

சரணங்கள்.

செஞ்சிற் வஞ்சைய — யாற்றும-இந்த
நெஞ்சம்பிரியமிலை — மாற்றுடனோடு
வஞ்செனிக — வல்லிமகிழுந்திடும்
ஐஞ்சூழ மணிதகிட தக்கிட தோ — மென்றுடிய-குஞ்

சாலைதனில்லிங்கேசன் வந்திருக்கும்-ஞான
மாலைத்தில்லைமிக நொந்தேன்-அசங்க
காலைகல்பிதங்கள் போக்கிப்போகத்திடும்
இந்திராவானவர்மாமுனி வந்துமிகஸ்துதிசெய்திடும்-குஞ்

பாலகிருஷ்ணன்தொழும் பாதா-மூர்த்தி
நால்வர்க்குதவிய நாதா-மெய்க்குன்
மேலிலகிருபைசெய்து வெற்றியளித்திடும்
அத்தனைகர்த்தனை சுத்தனையித்தனை கீர்த்தனஞ்செய்திடும்-குஞ்

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-அடதாளம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார் அம்பலந்தனிலே பொன்னம்பலந்தனிலே

அநுபல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார் அயனும்மாலும்பாடினார்
அந்தரங்கமாகச் சிந்தித்தபேர்க்கருள்
தந்தோந்தத்தோமென்று தொந்தோந்தோமென்று ஆன

சரணங்கள்,

பதஞ்சலிமா முனியைநோக்கிப்
பார்த்தபேர்கள் குறையைப்போக்கி
இமைதிதமென் றுயிலைநீக்கி
ஏகமாக காலைதூக்கி-ஆன

மத்தளதாள மதிரமுழங்க
வளரும்பிறமத கணங்களிலங்க
தத்தமிதக்கிட தோமென்றிலங்க
சபையுந்துலங்க சதங்கைகுலுங்க-ஆன

பாலகிருஷ்ணன் பணியும்பாதன்
பார்த்தபேர்கள் வரப்பிரசாதன்
ஞாலமபுகழுஞ் சிலபோதன்
சுந்தரநாதன் அம்பிகைபாதன்-ஆன

வசனம்.

இப்படியாடிய தாண்டவதரிசனங்கொடுக்க இன்றைக்குத்தான் சி த்தமிரங்கிற்றென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி ஆதிதாளம்.

சித்தமிரங்கிற்றோ யான்முன்செய்ததவ முற்றிற்றோ
அத்தாபரிசுத்தா வுன்னுடல்காணவந்தேன
என்னேயாண்டகோன் இதுவேசமயம் முன்னுடல்காணவந்தேன்

சாதிமுறைபோக்கும் என்னைச் சதுர்மறையோனுக்கும்
போதாசாரவுனருடல்காயவைத்தனை
என்னையாளுமெகள் இருவசமயமுன்னுடல்காயவைத்தனை
பாலகிருஷ்ணன்போற்றும் பாதா பதஞ்சலியோர்சற்றும
பிலாக்கிருலாவுன்னுடல்காயவைத்தனை
என்னையாளுமெகள் இருவசமயமுன்னுடல்காயவைத்தனை

விருத்தம்.

கனலிலுருவாகி வந்துகாட்சிகொடுத்துக் கடாட்சித்தபின்னெரியி
னைமூழ்கி வெருவின்பம்பெருகிய அன்பருடன்வேதமுனிவடிவாய்த்தி
ல்லைவெளியர்கை தொழுநாதராம் அங்கம்புனிதமாச் செம்பொன்

வசனம்.

திருநாளைப்போவாராகிய முனிவர் அக்கினியில குளித்தெழுந்து
கனகசபையிலடைந்து மனமுருகி அனந்தம்பெருகி எம்மாண்டவராகிய
நடேசமூர்த்தியைத் தோத்திரஞ்செய்கின்றது.

தேவாரம்.

பாளையுடைக்கமுகோங்கிப் பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந் தெறிவாழ்வயற்றில்லைதன்னு
ளாளையுடையுடைக்கழற்சிற் றம்பலவனுடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற் பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்னே

பொருவிடையொன்றுடைப் புண்ணியமூர்த்திதனை
உருவுடையன்மலை மங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர் வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
திருவுடையைக் கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே

தொடுத்தமலரொடு தூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது
மடித்துவைக்குமயனொடு மாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்து பொன்னாகியதில்லைச்சிற்றம்பலவ
னடித்தலங்கண்டகண் கொண்டுமற்றினிக்காண்பதென்னே

வைச்சபொருளமக் காகுமென்றெண்ணிநமச்சிவாய
அச்சமொழிந்தேனணி தில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர் நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற் புன்னைக்கண்கொண்டுகாண்பதென்னே

செஞ்சின்றநிலமலாகின்ற தில்லைச்சிற்றம்பலவன்
மஞ்சினதிவாலன்கள மல்கண்ணமகிழ்ந்திடக்
செஞ்சினறெறியும்விளக்கொற்ற நிலபணியிட்டான்
செஞ்சிலயாடக்கண்டாற் பின்னைக்கண்கொண்டுபார்ப்பதென்னே

ஊனத்தைநீக்கியுலகறிய வென்னையாட் கொண்டவன்
தேனொத்தினியான் றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன் னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டாற பின்னைக்கண்டுகொண்டோண்பதென்னே

தெரிந்தகணையாற் றிரிபுர மூன்றுஞ்செற்றியின் மூழ்க
வெரித்தவிறைவனிமையவர் கோமானிணையடிக
டரித்தானத்தவர்வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண் கொண்டுமற்றினிக்காண்பதென்னே

திருக்கமிசைத்துத்தன் றேருள்வலியுன்னித்தடவரைய
வரைக்கைகளாலெடுத்தாரப்ப மலைமகள்கோன்சிரித்து
ரரக்கன்மணிமுடிபத்து மணிதில்லையம்பலவ
னொருக்கமித்தவிரல் கண்டகண் கொண்டுகாண்பதென்னே

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி, யூற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி யோவாதசத்தத்தொளியேபோற்றி, யாற்றாகியங்கேயமர்ந்தாயபோற்றி யாறங்கனால்வேதமானாய்போற்றி, காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

சுற்றமமராசுரர்பதி நின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலேமென்றடைப் பரவையுணஞ்சையுண்டாய்
செற்றங்கனங்களைத்திவிழித் தான்றில்லையம்பலவன்
நெற்றியிற்கண்டகண் கொண்டுமற்றினிக்காண்பதென்னே

சித்தெழுந்த செழுங்கமலத்தன்சேவடிகள்
மைத்தமனத்தவர் வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வைரமும் மாணிக்கந்தனுளடங்கியதூவு
மத்தமலர்க்கண்டகண் கொண்டுமற்றினிக்காண்பதென்னே

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி பிறவியறுக்கும்பிரானேபோற்றி, வைச்சாடலென்றுமுகந்தாய்போற்றி மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி, பெச்சாகபுரமூன்றுமெரித்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, சச்சார்க்கைமசைந்தாய்போற்றி கைமலையானேபோற்றிபோற்றி

மருவார்புரமூன்றுமெரித்தாய்போற்றி மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி, யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி, திருவாகிநின்றதிருமேபோற்றி தேசம்பரவப்படுவாய்போற்றிபோற்றி

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி, யூனத்தைநீக்குமுடலேபோற்றி யோங்கியழலாய்நிமிர்

க்தாய்போற்றி, தேனைத்ததைவார்க்கமுதேபோற்றி தேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி, எனைத்திலாடுவாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

மாசிலொளியுடையமேனிபோற்றி போல்வருமுலாய்நிமிர்ந்தாய்போற்றி பேராயிரமுடையபேராய்போற்றி பேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி நீராவியானநிழலேபோற்றி நேராவொருவரையுமில்லாய்போற்றி காராகிநின்றமுகிலேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

சிலையுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி தேவாதிதேவதேவே போற்றி, புல்லுயிர்க்குப்பூட்சிபுணர்த்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, பல்லுயிராய்ப்பார்த்தோறுநின்றாய்போற்றிபற்றியுலகைவிடாதாய்போற்றி, கல்லுருவாய்நின்றகனலேபோற்றிகைலைமலையானேபோற்றிபோற்றி

பண்ணின்இசையாகிநின்றாய்போற்றி பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி, எண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி என்சிந்தைநீங்காவிறைவாபோற்றி, விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி, கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

இமையாதுயிராதிருந்தாய்போற்றி என்சிந்தைநீங்கா இறைவாபோற்றி, உமைபாகமாகத்தணைத்தாய்போற்றி ஊழிஏழானவொருவாபோற்றி, அமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி ஆதிபுராணனாய்நின்றாய்போற்றி, கமையாகிநின்றகனலேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

மூவாய்பிறவாயிறவாய்போற்றி முன்னமேதோன்றிமுளைத்தாபோற்றி, தேவாதிதேவர்தொழுந்தேவேபோற்றி சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி, ஆவாஅடியேனுக்கெல்லாம்போற்றி அல்லல்நலியஅலந்தேன்போற்றி, காவாய்கனகத்திரளேபோற்றிகைலைமலையானேபோற்றிபோற்றி

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி நீளவகலமுடையாய்போற்றி, அடியுமுடியுமில்லாய்போற்றியங்கொன்றறியாமைநின்றாய்போற்றி, கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி கோயிலாவென்சிந்தைகொண்டாய்போற்றி, கடியவுருமொடுமின்னேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி ஓதாதேவேதமுணர்ந்தாய்போற்றி, எண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி யிறைவிரலால்வைத்துகந்தாய்போற்றி, பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி பண்டேயென்சிந்தை புகுந்தாய்போற்றி, கண்ணுறுபுலகுக்கு நின்றாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

சிக்கு.

அம்பலமேவிய நம்பரத்தைக் கண்டாற்றித்திலரேல்

திருநாளைப்போவார் புராணம்,

விருத்தம்

தில்லைவாழந்தணர்க ளுடன்செல்லச்சென்றெய்திக்
கொல்லைமான்மறுத்தார் கோபுரத்தைத்தொழுதிறைஞ்சி
ஒல்லைபோயுட்புக்கா ருலகுய்யநடமாடும்
எல்லையினைத்தலைப்பட்டா ரியாவர்களுங்கண்டிலரால்.

வசனம்.

சைவபுராணமாகிய பெரியபுராணத்தில் திருநாளைப்போவார்நாய னாரென்னும் இயற்பெயர் சேக்கிழார்சுவாமிகள்சொல்லியிருப்பதால்இ டையில்நந்தமாமுனியென்று வழங்குகின்றநாளைப்போவார் தில்லை மூ வாயிரவமுனிவர்களோடேகூடி பொன்னம்பலவர்தாளுதற்கப்பாலவ ரைக்கண்டபேர்களில்லையென்று பெரியபுராணம்பாடியருளிய சேக்கி ழார்சுவாமிகள்சொன்னது அந்தத் திருநாளைபபோவாரென்னுமுனிவ ரானவர் புரட்டாசிமாசம் உரோகணிநட்சத்திரத்தில் கனகசபையில்வ ந்து கற்பூரஜோதியைப்போல் தோன்றிய சிவசாரூப்பியத்தை யடைந் தாரென்று உபமன்னியமகாரிஷி புண்ணியபத்தர் விலாசத்திலேயும் சொலலம்பட்டிருக்கின்றது.

இதுவுமதுவிருத்தம்.

அந்தணர்களதிசயித்தார் அருமுனிவர்துதிசெய்தார்
வந்தணைத்திருத்தொண்டர் தமமுமவினைமாசறுத்து
சந்தரைத்தாமரையுந் துணையடிதந்தொழுதேத்த
வந்தமில்லாவானந்தப் பெருங்கூத்தருள்புரிந்தார்.

வசனம்.

மறையோர்கள் ஆச்சரியப்பட்டார்கள் அரியமுனிவர்கள் தோத் திரஞ்செய்தார்கள் முடிவில்லாதத்தாண்டவஞ்செய்தருளுகிறசபாநாத ரதுகட்டளையால் வந்தடைந்த திருநாளைப்போவாருக்கு தீவினையாகிய களங்கத்தைநீக்கிய அழகாகியமலரையொத்ததமதிரண்டுபாதங்களையுந் தொழுதிருக்கும்படி அருள்செய்தார்.

விருத்தம்.

மாசடம்புவிடத்தீயின் மஞ்சனஞ்செய்தருளியெழுந்
தாசின்மறைமுனியாகி யம்பலவர்தாளடைந்தார்,
தேசுடையோர்வாழ்த்தத் திருநாளைப்போவாரும்
மாசகலமுயன்றுதிரு நடங்கண்டுமகிழ்வுற்றா

வசனம்,

தமக்குமுன்னிருந்த உடலமாகியமாசுநீங்கும்பொருட்டு அக்கினியாகிய திருமஞ்சனத்தாடியெழுந்து முப்புரிநூற்பிராமணமுனிவராகி நடேசருடைய திருவடியையடைந்தவராகிய திருநாளைப்போவாருடையபதத்தைப்புகழ்ந்து நிவிளையாகிய கப்புஅறுமப்படி தில்லை மூவாயிரவர்கள் போற்றிசெய்துக்கொண்டிருந்தார்கள்.

வாழிவிருத்தம்.

பங்கயமாதர்வாழி பாமகளுமையாள்வாழி
செங்கண்மாலயனும்வாழி தேவர்கள்முனிவர்வாழி
துங்கஞானமறைகள்வாழி தாரணிபரசர்வாழி
பொங்குநல்வல்லோர்வாழி போதமெய்ஞானம்வாழி.

மங்களம்,

ஓடிதரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவாருக்கு ஜெயமங்களம் எங்கள்
தில்லைமூவாயிரவர்க்கு சுபமங்களம்

அநுபல்லவி.


இருடிகள்முனிவர்க வீர்த்தினசயமென
விருகரமுடிமிசை மருதத்துதிசெய்கன்
பரவுமுப்பாசப் பிரமங்கள்துதித்திடும்
பரமனுமேம் பலத்தினில்கதித்திடும்-திரு

சரணங்கள்.

திருவாசமுந்திருக் கோவைபாடினவர்க்கும்
சீர்காழியிலுதித்துச் சிதந்தசம்பந்தருக்கும்
ஒருமாதிடந்தூதுக் குகந்துவிடுத்தவர்க்கும்
உருவசொப்பிலாத்திரு நாவுக்கரசருக்கும்
உரியமறைக்கு மூயற்கலைகட்கும்
உரகபதிக்கும் உவணபதிக்கும்
ஒதுசக்திரசூரியர் முனிவாகளுக்கும்
நீதிலாதபா வலர்முதலனைவர்க்கும்-திரு

நந்தனார்திவ்வியசரித்திரக்கீர்த்தனை

முற்றிற்று.



உ

சிவமயம்.

சிதம்பரக்கும்மி.

விநாயகர் துதி.

சீர்மேவுதில்லையம்பலத்தில்-அன்பு
சேரக்கும்மிதமிழ்பாட
கார்மேவுமேலைக்கோபுரவாசல்
கற்பகப்பிள்ளையார்காப்பாமே 1

முக்குறுணிவிநாயகர் தோத்திரம்.

சர்க்கரைமோதகதேங்காயுங்-கொண்டு
சந்நிதிமுன்பாகத்தான்படைத்து
முக்குறுணிப்பிள்ளையாரைவேண்டி
முழங்கிக்கும்மியடியுங்கடி 2

சுப்பிரமணியர் துதி.

கோலமயிலின்முதுகேறி-வந்து
கும்பமுனிக்குவருள்செய்யும்
பாலசுப்பிரமண்யன்பீஜாட்சரத்தைப்
பாடிக்கும்மியடியுங்கடி 3

கங்காதேவிக்குக்கைகூப்பி-யாருங்
கையிலெடுத்துள்ளபாணம்பஞ்சலி
தங்காமற்சிவகாமிசந்நிதி
சார்ந்துகும்மியடியுங்கடி

கருதுஞ்சுருதிக்கெட்டாத-சிவ
காமசவுந்தரிவாசலிலே
விருதுபேசிபேசிறகுழந்தைகள்
வேதம்படிக்குதுபாருங்கடி. 5

நாலுபுறத்திலுங்கோபுரமா-மதி
லேழுலெங்கணுமாளிகையாம்
நாலோராயிரங்கால்கொண்டொருமண்டபங்
கட்டியிருக்குதுபாருங்கடி. 6

தூயமறைமுதலாராய்ந்து-இங்கே
துலங்கியமூவாராயிரவர்
ஞாயம்பொருந்தியதேவசபைவந்து
நாடிக்கும்மியடியுங்கடி. 7

சங்குபொட்டுதளதளென-நல்ல
சந்தனவாண்டகுமுகுமென
கூந்தலழகிகளெல்லோருங்காலைக்
குளித்துக்கும்மியடியுங்கடி. 8

அல்தகடகம்பளபளென்ன-மொரலலும்
அரைதோள்மாலைதளதளென்ன
விஸ்தாரமாகநின்றுங்கொண்டுகையை
வீசிக்கும்மியடியுங்கடி 9

கைதனில்விபூதிப்பையுங்கொண்டு-அவர்
கண்டத்திலுருத்திராட்சமாலைபூண்டு
வைதீகபூசைசெய்கின்றதீட்சதா
வாழக்கும்மியடியுங்கடி 10

கோவிலுக்குநாலுபேர்களுண்டாம்-அவர்
குறித்தமுறையாய்ப்பூசைசெய்ய
பாவித்தபின்பவர்வேறொருவர்வசப்
படுத்துவாரன்றேகும்மியடியுங்கடி 11

ஆண்டுக்குள்ளாறபிஷேகமுண்டாம்-பின்னும்
அதிமேலானதிருநாளாம்
வேண்டிவந்தார்களிருப்பமென்று
விளைந்துகும்மியடியுங்கடி 12

பூதபுகழ்ந்திடுந்தில்லைப்பதி-அது
பூலோககயிலாசமென்று
தாமரைப்பூவினில்வாழ்கின்றலட்சுமித்
தாயாரசந்நிதிபாருங்கடி 13

மூலஸ்தானத்தைக்கண்டாயே-நல்ல
மூர்த்திவிருமிவனங்கொண்டாயே
காலெடுத்தாடியசிற்சபேசனைக்
கண்டுதெரிசிப்போம்வாருங்கடி 14

தில்லைமாகாளிபோடிவர-அவள்
சித்தங்கலங்கித்தலைகுனிக்காள்
வெல்லுவதெப்படியெனவொருகாலை
விண்ணிலெடுத்தார்பாருங்கடி 15

நெற்றியில்வேர்வைமுத்துதிர்த்து-மெத்த
நேக்கியதாய்ப்பரந்தோடிவர
பத்தியுடன்பொன்னம்பலவாணனைப்
பணிந்துகும்மியடியுங்கடி 16

தித்திபென்றீசநடம்புரிய-மெய்த்
தேவர்கள்பூமழைதான்சொரிய
மததளங்கொட்டியகோபாலகிருஷ்ணனை
வாழ்த்திக்கும்மியடியுங்கடி 17

சிதம்பரமென்றுசொல்லாமல்-விச்
சித்திரக்கூடமென்றுசொல்லி
நிதங்கொண்டுமறையோர்கள்வந்து
நின்றிருக்கிறார்பாருங்கடி 18

காணிக்கைகொண்டுவாருங்கடி-இந்தக்
கனகசபையைப்பாருங்கடி
மாணிக்கவாசகர்புகுந்தவாசலை
மதித்துக்கும்மியடியுங்கடி 19

அன்னமுப்பன்பால்தேங்கனியும்-செய்யும்
அபிஷேகமுண்டென்றொரும்
பொன்னம்பலந்தனிற்சுத்திரமௌலியைப்
போற்றிக்கும்மியடியுங்கடி 20

மூர்த்தியளித்திடுஞ்சந்நிதிக்குச்-சொல்லு
மேளமுந்தாளமுமேதுக்கடி
சுத்தம்பெருங்கண்டாமணியோசை
சந்நிதிக்கோவையாம்பாருங்கடி 21

புட்டுவடையுந்தேன்குழலும்-மணப்
புத்துருக்குநெய்சம்பாவும்
சட்டப்படித்தவறாமலேயன்
சந்நிதிக்கோவையாம்பாருங்கடி 22

சுற்றிலக்குச்சிலைப்பாருங்கடி - நல்ல
சொர்ணமயக்கோபுர மாளிகையதடி
தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கூடிச்
சமைந்தசபையைப்பாருங்கடி. 23

பாவிகள்கண்ணார்க்குத்தெரியாதடி - உற்றுப்
பார்த்தால்பத்தரைமாற்றுத்தங்கம்
கொண்டையாடியமாணிக்கவாசகர்
கோவிலதைப்பாருங்கடி. 24

அஞ்செழுத்தாலேமதிலுமுண்டாம் - பா
மாணிக்கத்தூம்பமுமுண்டாம்
அஞ்செழுத்துப்படிக்கப்பாலேயிரம்
மாவந்ததாண்டவம்பாருங்கடி. 25

கோடியுகந்தவஞ்செய்தாலுமிந்தக்
கோயிலைப்பார்க்கமுடியாது
மூடியமாதத்தைக்கண்டாருக்கினி
யாரென்றுசொல்லுவோம்பாருங்கடி. 26

நெற்றியிலேதிருமீரணிங்களென்றும்
விக்களமாகிநிற்சபையில்
நித்திக்கவேசிவகாமத்தைப்பூசிக்குந்
தீட்சதர்கூட்டத்தைப்பாருங்கடி. 27

வெட்டவெளியிற்றிரைதிறந்தியார்க்கும்
வேதியர்தீபமுங்காட்டுவார்
சட்டமுள்ளசிவசிதம்பரமென்று
சாற்றிக்கும்மியடியுங்கடி. 28

தில்லைவெளியைக்கண்டேண்டி - அங்கே
தேகம்பரவசங்கொண்டேண்டி
அல்லலறவாசலின்றேண்டிமிக்க
ஆனந்தத்தாண்டவம்பாருங்கடி 29

ஆகாசலிங்கத்தைக்கண்டேண்டி - அங்கே
யாவருமறியாமல்நின்றேண்டி
ஏகாந்தமாகவிருந்தேண்டிமன
தேகக்களித்துப்பாருங்கடி 30

சித்தஞ்சிதம்பரமாச்சுதடி முன்
செய்தவினையெல்லாம்போச்சுதடி
சுத்தப்பிரம்மமயமாச்சுதடியதைச்
சொல்லத்தெரியுமோபாருங்கடி 31

சாதிபேதங்களற்றேண்டி- இந்தச்
சாஸ்திரமானதைவிட்டேனடி
போதமயக்கங்கொலேக்கேண்டியின்று
புகுந்துகும்மியடியுங்கடி 32

நாடிந்தைப்பூரணபூசத்திலே-ஏக
நாயகன்றன்குருவாரத்திலே
ஆடியநாடகம்பாம்புபுலிக்கனக்
காமென்றுகும்மியடியுங்கடி 33

சஞ்சிதகர்மங்கள்விட்டேண்டி-பல
சாகாத்தையொழித்திட்டேண்டி
குஞ்சிதபாதத்தைத்தொட்டேண்டிமனங்
கூர்ந்துகும்மியடியுங்கடி 34

சொல்லும்பொருளையுமற்றுயே-முன்
துன்பமனைத்துமொழித்தாயே
அல்லும்பகலையுமற்றுயேதில்லை
யானந்தத்தாண்டவம்பாருங்கடி 35

விதியெழுத்தைக்கிழித்தாச்சு-முன்
விட்டகுறைவந்துதொட்டாச்சு
மதியமிர்தகுவடாச்சுதென்று
வாழ்த்திக்கும்மியடியுங்கடி 36

கோவிலுக்குள்ளேயனேகமுண்டு-அந்தக்
குறிப்பறிந்ததைச்சொல்லுவீரே
தேவரகசியம்பள்ளியறைவந்து
தெளிந்துக்கும்மியடியுங்கடி 37

சண்டேஸ்வரர்தம்மைப்பாருங்கடி-அந்தச்
சந்திதிக்கேகைகொட்டுங்கடி
மண்டலம்புகழுமழகர்வாசலில்
வாழிபாடுவோம்வாருங்கடி 38

வீட்டுக்கவலைகள்விட்டொழியார்-மெத்த
வீம்புகள்பேசியேவீணைப்பார்
பாட்டைப்படித்தாலுஞ்சிதம்பரம்வந்த
பலனதல்லவோபாருங்கடி 39

புத்திரபாக்கியமெத்தவுண்டாம-பசும்
பொன்னுதணிப்பூஷணமுமுண்டாம்
பத்தியுடன்கோபாலகிருஷ்ணனை
பணியக்கும்மியடியுங்கடி 40

சிதம்பரக்கும்மி-முற்றிற்று.

உ

சிவமயம்.

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார் திவ்விய சரித்திரக் கீர்த்தனைகளின்

அகராதி.

———